# பரமானந்தம்

யா/ பொன்.பரமானந்தர் மகா வித்தியாலயம்
குரும்பசிட்டி

பரம்–03

2017




வெளியீடு: 07.11.2017

யா/பொன் பரமானந்தர் மகா வித்தியாலயம்
குரும்பசிட்டி

# பரமானந்தம்

பரம் - 03

07.11.2017

## மலரின் உள்ளே.......


- பாடசாலையின் விபரங்கள்
- வித்தியாலயக் கீதம்
- கொடிக் கீதம்
- சமர்ப்பணம்
- ஆசிச் செய்திகள்
- வாழ்த்துச் செய்திகள்
- இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து
- From the Associate Teachers Heart
- மாணவர்களின் ஆக்கங்கள்
- ஆசிரியர்களின் ஆக்கங்கள்

## நிறுவுநர்



அதிபர் திலகம்

திரு.பொன்.பரமானந்தர் அவர்கள்

# பாடசாலையின் விபரங்கள்

# யா/பொன்.பரமானந்தர் மகா வித்தியாலயம்
# குரும்பசிட்டி

*மகுட வாசகம்*

**‘கற்பவை கற்றுக் கற்றாங்கொழுகு’**

*பணிக்கூற்று*

“அறிவு, திறன், மனப்பாங்குடனான கட்டமைப்பான விழுமியச் செயற்பாடுகளின் ஊடாக ஆற்றல் மிக்க தொழிநுட்பத் திறனோடு இணைந்த உறுதியான கல்வியை சிறப்பாக வழங்குதல்”

*தொலைநோக்கு*

“கல்வி, கலை, கலாச்சார ஆன்மீகப் பண்புகளோடு உடல், உள, ஆரோக்கியமான ஆளுமை மிக்க மாணவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்”

## பாடசாலை தொடர்பான அடிப்படை விபரம்

| | | |
|---|---|---|
| 1. | மாகாணம் | :- வடக்கு |
| | மாவட்டம் | :- யாழ்ப்பாணம் |
| | வலயம் | :- வலிகாமம் |
| 2. | கோட்டம் | :- தெல்லிப்பளை |
| 3. | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | :- தெல்லிப்பளை |
| 4. | பிரதேச சபை | :- வலிவடக்கு, தெல்லிப்பளை |
| 5. | தேர்தல் தொகுதி | :- காங்கேசன்துறை |
| 6. | கிராமசேவையாளர் பிரிவு | :- து/243 குரும்பசிட்டி கிழக்கு. |
| 7. | பாடசாலையின் பெயர் | :- யா/பொன்.பரமானந்தர் மகா வித்தியாலயம். |
| 8. | பாடசாலையின் முகவரி | :- குரும்பசிட்டி, தெல்லிப்பளை |
| 9. | பாடசாலை நிறுவிய ஆண்டு | :- 1900 |
| 10. | பாடசாலை குறியீட்டு எண் | :- 1013011 |
| 11. | தொகை மதிப்பீட்டு இலக்கம் | :- 09129 |
| 12. | பரீட்சை இலக்கம் | :- 11271 |
| 13. | பாடசாலை வகை | :- வகை III |
| 14. | வகுப்பு பரம்பல் | :- 1 - 5 |
| 15. | பிரதான மொழிமூலம் | :- தமிழ்மொழி |
| 16. | இட அமர்வு | :- கிராமம் |
| 17. | தொலைபேசி இலக்கம் | :- அலுவலகம் - 0213200996<br>அதிபர் தொலைபேசி - 0779102654 |

# வித்தியாலயக் கீதம்

பொன்பர மானந்தர் புகழ் வித்தி
யாலயம் வாழிய வாழியவே
மன்பதை போற்ற வளர்ந்து சிறந்து
நிறைந் தென்றும் வாழியவே - பொன்பர

எண்ணு மெழுத்து மாளாவுமு யர்பயன்
எய்து கலை பலவும்
வண்ண வளத்தொழில் முன்னிலை ல்வி
வளர்நெறியும் புகட்டி

மாணவ மலர்களின் புலன்களைத் திறன்களை
மனங்களைக் க[illegible] தினிது
காணுயர் நெறிமுறை பேணி வளர்த்திடும்
கற்பகக் கலைக் கோயில் - பொன்பர

எண்ணிய வாக்குநர் புண்ணிய நோக்குநர்
எங்கள் தவப் பயனார்
கண்ணிகர் சான்றவர் பொன்பர மானந்தர்
கருத்தினிற் பணிபுரிந்து

புத்தொழில் வீரரைப் புகழ்கலை வாணரைப்
பொதுப் பணியாளர்களை
எத்திசை யும்பதித் தேயெழப் பெற்றிடும்
எங்கள் நலக் கோயில் - பொன்பர

**ஆக்கம். கவிஞர்.வி.கந்தவனம்**

# கொடிக்கீதம்

பொன்.பரமானந்தர் மகா வித்தியாலயம்
எங்கள் இதயக் கோயிலன்றோ
ஏறுது ஏறுது எங்கள் கொடியிங்கு
ஏறுது ஏறுது ஏறுது பார்

பொன் பரமானந்தர் மகா வித்தியாலய
மாண்புறும் கொடியிங்கு ஏறுது பார்
ஏறுது ஏறுது எங்கள் கொடியிங்கு
ஏறுது ஏறுது ஏறுது பார்

கற்பவை கற்றுக் கற்றாங் கொழுகெனும்
பொற்புடை வாசகத்தை
பற்றி நிற்கும் எங்கள் வெற்றிக் கொடியிங்கு
ஏறுது ஏறுது ஏறுது பார்

கல்வியில் சிறந்து கலைகளில் மலர்ந்து
சீரிய வாழ்வு பெற்றிடவே
நல்வழி காட்டிடும் எங்கள் கொடியிங்கு
ஏறுது ஏறுது ஏறுது பார்

அதிபர் ஆசிரியர் அருமைப் பெற்றோர்கள்
அரவணைப்பில் உயர்ந்திடவே
அதியுயர் வாழ்வினைக் காட்டிடும் கொடியிங்கு
ஏறுது ஏறுது ஏறுது பார்

ஏறுது ஏறுது எங்கள் கொடியிங்கு
ஏறுது ஏறுது ஏறுது பார்
ஏறுது ஏறுது ஏறுது பார்
ஏறுது ஏறுது ஏறுது பார்

ஆக்கம். ஆ.சி.நடராஜா

# சமர்ப்பணம்



திரு.சீ.கணபதிப்பிள்ளை அவர்கள் திரு.பொன்.பரமானந்தர் ஆசிரியருக்குப் பின் 01.01.1940இல் தலைமை ஆசிரியர் பதவியை ஏற்று 20.10.1960வரை இவ்வித்தியாலயத்தில் 20வருட காலம் பாடசாலைச் சேவையை தெய்வப் பணியாகக் கொண்டு தமது சக்தி முழுவதையும் அர்ப்பணித்து கல்வி,கலை கலாசார பண்பாட்டு வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கிய தலைமை ஆசிரியர், அமரர்.சீ.கணபதிப்பிள்ளை அவர்களுக்கு பரமானந்தம் மலர் - 03 ஐ சமர்ப்பணம் செய்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்.**

# எமது வித்தியாலய முதல்வர்



திரு.பொ.ரவிச்சந்திரன்
B.ED, Maths Trd, SLPS II

## ஆசிரியர் குழாம் -2017





# ஆசிச்செய்தி

யா/பொன்.பரமானந்தர் மகாவித்தியாலயத்தின் வருடாந்தபரிசளிப்பு விழாவில் மலரும் 'பரமானந்தம்' மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எனது கோட்டத்தில் சிறந்தமுறையில் செயற்பட்டுவரும் பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும். இப்பாடசாலை இன்று கல்வித்துறையில் முன்னேற்றம் கண்டு வருகின்றது. இன்றைய அதிபரும், ஆசிரியர்களும் காட்டுகின்ற ஆர்வமே இதற்கு காரணமாகும்.

பரிசளிப்பு விழாவினை கொண்டாடும் இன்றைய நன்நாளில் இப்பாடசாலை மேன்மேலும் வளர எனது நல்லாசிகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**மா.ஆனந்தகுமார்**
கோட்டக்கல்வி அதிகாரி,
தெல்லிப்பழை.

# வாழ்த்துச் செய்தி



பொன் விளையும் ஊரிலே பொன்.பரமானந்தர் கொடையிலே வந்துதித்த மழலைக்கு இன்று மலரொன்று மலர்வது கண்டு அதனை வாழ்த்துவதற்கும் வாய்ப்பொன்று கனிந்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பொன்னும் நிலைக்காது பொருளும் நிலைக்காது தான் கற்ற கல்வி ஒன்றே நிலைக்கும் என்பதை வள்ளுவனும் ஒருவனுக்குத் தான்கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்துஎன்று திருவாய்மலர்ந்தார். மேலும் ஆயிரம் அன்னசத்திரங்களை விட ஏழைக்காங்கோர் கல்வி புகட்டுவது மேல் என பாரதியின் பாடலையும் உணர்ந்து பொன்.பரமானந்தர் உருவாக்கிய இப்பாடசாலை செயலிழந்து பலசோக கதைகளையும், சொந்தங்களையும் தான்பட்ட துன்ப துயரங்களையும் இழப்பதற்கு இனி என்ன இருக்கிறது? எப்போது இனி மீண்டும் எழுவேன் என்று ஏங்கித் தவித்த நேரத்திலே தான் குரும்பசிட்டியின் குறுநில மன்னன் அமரர் ஆ.சி. நடராஜா அவர்களின் அருந்தவப் பயனால் அது மீண்டும் புத்துயிர் பெற்று தன் மிடுக்கோடு தனது சொந்த இடத்தில் தலைநிமிர்ந்து நிற்கிறது கண்டு பெருமைகொள்ளாமல் இருக்க முடியாது. அறிஞர்களை, கவிஞர்களை, ஆற்றல்மிகு வீரர்களை, வாரிவழங்கும் கொடை வள்ளல்களை ஏழை எளியவர்களின் துயர்துடைக்கும் மூலாதாரக் கல்வியை சற்றும் சளைக்காது தன் நிலைமாறாது மீண்டும் அது வழங்கிக்கொண்டிருக்கிறது என்றால் அதன் பெருமை சொல்லி மாறாது இன்று சிற்றாறாக உருவெடுத்திருக்கும் இப்பாடசாலை நாளுக்குநாள் பெருகி பேராறாகி எட்டுத்திக்கும் புகழ்பரப்பி ஓடும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை எனக்கும் உண்டு மேலும் கல்வியில் துரித வளர்ச்சி கண்டுவரும் இப்பாடசாலையின் மீதும் சமூகத்தின் மீதும் குரும்பசிட்டி கிராமத்தின் மீதும் பற்றுக்கொண்டுள்ள புலம்பெயர்ந்த நம் உறவுகள் பாடசாலைக்காக அயராது உழைத்து வருவது பெருமைக்குரியது, பாராட்டுக்குரியது. மேலும் இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பலசாதனைகள் படைக்க குரும்பசிட்டி அம்மனின் அருளாசியை வேண்டி நிற்பதோடு, வளமுடன் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்தி எனது நன்றிகளையும் பராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுபம்

**இ.தேவராசா**
முன்னாள் அதிபர்
யா/பொன்.பரமானந்தர் ம.வி
குரும்பசிட்டி



# வாழ்த்துச்செய்தி

குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் மகாவித்தியாலயத்தின் வெளியீடாக 'பரமானந்தம்' மலர் இவ்வருடம் 03வது மலராக மலர்கிறது. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா, 'பரமானந்தம்' மலர் வெளியீட்டு நாளாகவும் ஒன்றிணைந்துள்ளது. இந்நிகழ்வானது பாடசாலையின் பெருமையினையும், மேம்பாட்டினையும் எடுத்துக்காட்டுகின்றது.

பரமானந்தம் மலருக்காக பழைய மாணவர்களின் பிரதியாக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனநிறைவடைகின்றேன். மீள்குடியேற்றத்தின் பின் தற்போது மீண்டும் புதுப்பொலிவுடன் எமது பாடசாலை வளர்ச்சிபெற்று வருகின்றது. இன்றைய நாள் எமது பாடசாலை மாணவர்களின் கல்விசார் பெறுபேறுகளையும், இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் வெளிக்கொணரரும் நாளாகவும் அமைந்துள்ளது.

பாடசாலையின் முதல்வர் திரு.பொ.ரவிச்சந்திரன் அவர்களின் அயராத உழைப்பின் பயனாக பாடசாலை வளர்ச்சி அடைந்து வருகின்றது. அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம். கல்லூரியின் முழுமையான செயற்பாடுகளுக்கு பழைய மாணவர்களின் பங்களிப்பு குறிப்பாக குரும்பையூர் உறவுகளின் பங்களிப்புக்கள் மற்றும் வெளியூர் உறவுகளின் பங்களிப்புக்கள் போற்றுதற்குரியது.

எமது பாடசாலை சகல துறைகளிலும் வளர்ச்சிபெற்று ஒரு தலைசிறந்த பாடசாலையாக மிளிரவேண்டும் என எல்லாம்வல்ல சித்திவிநாயகப் பெருமானையும் முத்துமாரி அம்பாளையும் வேண்டி நிற்கின்றோம். வாழ்க வளமுடன்.

சுபம்

**பழைய மாணவர் சார்பில்**
திரு.பொ.தங்கராஜா
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.



# வாழ்த்துச்செய்தி
# வெற்றிமணி பரமானந்தம் சிறப்பாக மலர ஆனந்தமாய் வாழ்த்துகிறது!

குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாசாலை அமரர் பொன்.பரமானந்தர் அவர்களால் 1900 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்று அவர் தனது மகன் மகாதேவா அவர்களின் பெயரினை பாடசாலைக்கு சூட்டி மகாதேவா வித்தியாசாலை என்றே ஆரம்பித்திருந்தார்.

அமரர்.மு.க.சுப்பிரமணியம் அவர்கள் தான் அதிபராக இருந்த காலத்தில் பெரியவர்களிடம் அனுமதி பெற்று பொன்.பரமானந்தர் வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்தார். பொன்பரமானந்தர் வித்தியாலயம் 1975ம் ஆண்டு 75ம் ஆண்டு பாடசாலை நிறைவின்போது ஆனந்தமாக "பரமானந்தம்" என்னும் மலரினையும் வெளியிட்டு மகிழ்ந்தது. இப் பாடசாலையின் இம்மலர் 75 வருட பாடசாலை வரலாற்றினை தொகுத்து வழங்கியது. இதன் கருவூலமாக இருந்து உழைத்தவர் அதிபர். அமரர்.மு.க.சுப்பிரமணியம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இன்று 'பரமானந்தம்' இதழ் - 3 வெளிவருவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தாயகத்தில் 2005 முதல் 2015 வரை வெற்றிமணி பத்திரிகையின் இணை ஆசிரியராக பணியாற்றிய திருமதி வலன்ரீனா இளங்கோவன் தான் பெற்ற சிறந்த அனுபவத்தை இம்மலர் மூலம் பறைசாற்றுவார் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

இன்று அதிபராக சிறந்த சேவை ஆற்றிவரும் திரு.பொ.ரவிச்சந்திரன் அவர்களும், சக ஆசிரியர்களும் பாடசாலையின் பெயர் உயர கடுமையாகஉழைப்பது தெரிகிறது.

யாவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

**கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்**
(பொன்பரன்)
வெற்றிமணி சிவத்தமிழ் பிரதம ஆசிரியர்
ஜேர்மனி, லண்டன்.



## இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...

யாழ்.குடாநாட்டின் வடபால் வலிகாமம் பகுதியில் அமைந்திருக்கும் கிராமங்களில் குரும்பசிட்டிக் கிராமமும் ஒன்றாகும். இக்கிராமத்து மக்களிற்கு கல்வி, கலைகளை புகட்டி நல் நித்திலமாய் ஒளி வீசுகின்ற எமது பொன்.பரமானந்தர் மகாவித்தியாலய அன்னையின் 'பரமானந்தம்' என்னும் மூன்றாவது மலர் மலர்வதையிட்டு பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

இம்மலரினை வெளியிடுவதற்கு அருள்பாலித்த சித்திவிநாயகப் பெருமானையும், முத்துமாரியம்பாளையும் வணங்கி நிற்கின்றேன். இந்நூலினை வெளியிடுவதற்கு அதிபர் அவர்களின் அனுமதியைக் கேட்டபோது, அனுமதியளித்து எனக்கு வேண்டிய ஆலோசனை களைத் தந்து, ஆர்வத்துடன் ஊக்கம் அளித்த அதிபர் அவர்களிற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒருவர் தான் கல்விகற்ற பாடசாலையிலே ஆசிரியராக இருக்கும் போது வெளியிடப்படும் மலருக்கு இதழாசிரியராக இருப்பது என்பது மிகமிக அரிதான விடயமாகும். இவ்வாய்ப்பினை வழங்கிய பரமானந்த அன்னையின் பாதக்கமலங்களுக்கு எனது பணிவான சிரந்தாழ்த்திய வணக்கங்கள்.

இந்நூலானது மீள்எழுச்சியின் பின் எமது பாடசாலை பற்றிய தகவல்களை ஆவணப் படுத்தி எமது எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கும் ஒரு ஆவணக்காப்பேடாகவும் அமைகின்றது.

2017ஆம் ஆண்டின் பரிசளிப்பு விழாவில் இம்மலரானது மலர்கின்றது. ஆசிரியர்களதும், மாணவர்களதும் படைப்பாக்கத்திற்கு களம் அமைத்துக் கொடுக்கும் இம்மலரானது எமது கைகளில் தவழ ஒத்துழைப்பு வழங்கிய மாணவர்கள், ஆசிரியர்கள், திருமதி அ.சிவதீபன் மற்றும் பேராசிரியர்கள், நலன்விரும்பிகள், விளம்பர அனுசரணையாளர்கள், இம்மலரினை கணினியில் பதிவுசெய்த செல்வி.சி.பிரதா (உரும்பிராய்) அவர்களுக்கும், குறுகிய காலத்தில் நூலினை அச்சிட்டு உதவிய அன்ரா பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சின்னஞ்சிறு சிட்டுக்களாய் மழலை மொழி பேசி அன்னையின் அரவணைப்பில் பசுமையான நினைவுகளைப் பதிவேற்றிய பள்ளிக் குழந்தைகள் இலக்கிய கர்த்தாக்களாக சுடர்விடட்டும். மேலும் இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர்.மு.க.சுப்பிரமணியம் அவர்கள் சிறுவர் மாத இதழாக எமது குழந்தைகளுக்காக 'வெற்றிமணி' எனும் பத்திரிகையை வெளியிட்டு உதவினார் இவரின் முயற்சியால் 1975 இல் முதலாவது பரமானந்தம் என்னும் மலர் மலர்ந்தது.

யாழ்.வெற்றிமணி பத்திரிகையின் இணையாசிரியராக என்னையும் இணைத்து எழுத்துத் துறையில் ஈடுபட வழிசமைத்த வெற்றிமணிக்கும் இந்நேரத்தில் தலைவணங்கி, வருடம் தோறும் இம்மலர் மலர்ந்து நறுமணம் வீசவேண்டும் என்று எனது பாடசாலை அன்னையின் பாதார விந்தங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

**திருமதி வலன்ரீனா இளங்கோவன்**



## From the Associate Teacher's Heart

It's my Pleasure to welcome the 3rd book release of "Paramanantham" on this auspicious occassion of Prize Giving – 2017 of Pon. Paramananthar Maha Vidyalayam, Kurumpasiddy.

It's an honor to have the opportunity of offering the service to my native community. Also, this book is a great effort put in to create milestone in teacher's and student's creativity.

I'm proud to be part of the creation of this book.

Thank you.

**Mrs. Ambika Sivatheepan**

# அதிபர் அறிக்கை

குரும்பசிட்டி பதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளையும், ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானையும் மற்றும் இஷ்டதெய்வங்களையும் வணங்கி, அவையில் கூடியிருக்கும் அனைவருக்கும் இனிய வணக்கம்கூறி, அதிபர் அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் பேருவகையடைகின்றேன். இந்நன்நாளில், எமது இனிய அழைப்பை ஏற்று முதன்மை விருந்தினராக கலந்து விழாவை முதன்மைப்படுத்திக் கொண்டிருக்கும் திரு. க. செவ்வேல் Chairman UR Foundation அவர்களே, சிறப்பு விருந்தினர்களாக கலந்து எம்மையெல்லாம் மகிழ்வித்துக் கொண்டிருக்கின்ற பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் திரு. இ. தேவராசா மற்றும் திரு. திருமதி. தயாபரன் அவர்களே, திரு. த. யோகராசா அவர்களே கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற தினக்குரல், கல்விக்குரல் பொறுப்பாசிரியர் திரு. S. சுஜீபன் அவர்களே, கிராம உத்தியோகத்தர் திரு. நா. ஜெயவிந்தன் அவர்களே, பழைய மாணவர் சங்க செயலாளர் திரு. பொ. தங்கராசா அவர்களே, பரமானந்தம் நூலுக்கு ஆய்வுரை நிகழ்த்த வந்திருக்கும் கிளி/ கிளாலி றோ. க. த. க. பாடசாலை அதிபர் திரு. அ. கஜேந்திரன் அவர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, பாடசாலையின் உயர்வுக்காய் அயராது உழைத்து நிற்கும் ஆசிரியப் பெருந்தகைகளே, பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நிர்வாக உறுப்பினர்களே, அன்பான பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, அன்புக்குரிய மாணவச்செல்வங்களே தங்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது பாடசாலை யாழ்ப்பாணம் நகரிலிருந்து ஏறத்தாழ 12km தூரத்தில் வடக்கே அமைந்துள்ள விவசாய பூமியான மீள்குடியேற்றக் கிராமமான குரும்பசிட்டியில் அமைந்துள்ளது. தற்போது இங்கு வாழும் மக்களில் பொரும்பாலானோர் மீளக்குடியமர்த்தப்பட்டு பொருளாதார நிலை குன்றிய நிலையில் கடின உடல் உழைப்பின் மூலம் வாழ்க்கை நடாத்துபவர்கள். இங்கு கற்கும் மாணவர்களின் குடும்பங்கள் கல்வி கற்றவர்களாகவோ, அரச உத்தியோகம் பார்ப்பவர்களாகவோ இல்லை. இந்நிலையில் இப்பாடசாலை 1990 இடப்பெயர்விற்குப் பின்னர் மீண்டும் தனது பழைய இடத்தில் 12.01.2012 ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு செயற்பாடுகளில் முன்னேறி வருகின்றது. எனக்கு முன்னர் மிகச் சிறப்பாக வழிநடாத்திய அதிபர் திரு. இ. தேவராஜா அவர்களிடமிருந்து 2016ம் ஆண்டு இப்பாடசாலையை பொறுப்பேற்றேன்.

**மாணவர் எண்ணிக்கை**

மாணவர்களினது எண்ணிக்கை வகுப்பறைகளில் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. இடப்பெயர்வுகளுக்கு முன்னர் க.பொ.த(சா/த) வகுப்புவரை இயங்கியபோது 815 மாணவர்கள் வரையில் கல்வி கற்ற இப்பாடசாலையில் தற்போது தரம் 05 வரை இயங்கிய நிலையில் சென்ற வருடம் 67 மாணவர்களுடன் இயங்கியது. இன்று 80 மாணவர்களுடன் இயங்குகின்றது. இதற்கான காரணத்தை நோக்கும் போது, எமது கிராமம் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படாமல், இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருப்பதனாலும், வலிவடக்கு பகுதிகளிலுள்ள பல பிரதேசங்கள் விடுவிக்கப்படாமையையும், விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்படாமையும், விடுவிக்கப்படாத பிரதேச மக்கள் பல வருடங்களாக இடம்பெயர்ந்த நிலையில் இன்னமும் வாழ்ந்து வருகின்றமையும், பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகரப்பாடசாலைகளிலும் அண்மையிலுள்ள பெரும் பாடசாலைகளிலும் சேர்ப்பதனால் இந்நிலை ஏற்படுகின்றது. எனவே நிறைவான வளங்கள் உள்ள இப்பாடசாலையில் மாணவர்களின் தொகையை அதிகரிப்பதற்கு இக்கிராம பெற்றோர்கள், பெரியோர்கள், கல்விமான்கள் தங்களுடைய பிள்ளைகளை இங்கு கல்வி கற்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தி, சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மாணவர் தொகையை அதிகரிக்கச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். மேலும் பாடசாலையை க.பொ.த. (சா/த) வரை தரம் உயர்த்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**ஆசிரியர் எண்ணிக்கை**

தற்போது இப்பாடசாலையில் 5 நிரந்தர ஆசிரியர்களும், 1 பகுதிநேர ஆங்கில ஆசிரியரும், தொண்டர் ஆசிரியர் ஒருவரும், அதிபர் உட்பட 8 பேர் பணியில் உள்ளனர். எமது பாடசாலை ஒரு நிறைவான ஆசிரியர் குழாத்தைக்கொண்டு சிறப்பான, தமது கற்பித்தல் சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பாடசாலை ஆசிரியர்கள்**

| | |
|---|---|
| திரு. பொன்னம்பலம் ரவிச்சந்திரன் | B.ED, Maths Trd, SLPS II |
| திருமதி. கமலவேணி கிருஷ்ணதாசன் | Commerce Trd, SLTS I |
| திருமதி. யோகலட்சுமி சுப்பிரமணியம் | Primary Trd, SLTS I |
| திருமதி. வலன்ரீனா இளங்கோவன் | B.A (PGDE), M.A(Dist), M.Phil(Read), SLTS 2 I |
| திரு. இராசதுரை பாலமுரளி | B.A (PGDE), Dip.in.Teach (primary), SLTS 2 II |
| திரு. இராநாயகம் வாகீசன் | Dip.in.Teach (primary), SLTS 2 II |
| திருமதி. அம்பிகா சிவதீபன் | Part time English HNDE |
| செல்வி. ராஜினி சதீஸ்குமார் | volunteer Teacher |

ஆசிரியர் திருமதி வலன்ரீனா இளங்கோவன் அவர்கள் 2012ம் ஆண்டு இந்திய தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியால் நடாத்தப்பட்ட உலகத் தமிழ் ஆசிரியர் மாநாட்டில் கலந்து கொண்டு, ஒருநாள் அமர்வுக்கு தலைமை தாங்கியதுடன் இலங்கை பற்றி அறிக்கையும் செய்திருந்தார் அத்தோடு இலங்கை கல்வி நிலை பற்றியும் ஊடகங்கள் தமிழ்மொழியை வளர்க்கின்றனவா? என்ற தொனிப்பொருளிலும் கட்டுரையும் வாசித்தித்தார். இம்மாநாட்டில் இவரது கட்டுரையே சிறந்த கட்டுரையாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவ் ஆசிரியருக்கு 2017ம் ஆண்டுக்கான மாகாணநிலை நல்லாசிரியர் (குரு பிரதிபா பிரபா) விருது கிடைக்கப் பெற்றமையையும் மகிழ்வுடன் குறிப்பிடுகின்றேன்.

**கல்விச் செயற்பாடுகள்**

இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் கூடுதலாக நாளாந்த கூலிவேலை செய்பவர்களாகவும், வறுமைக்கோட்டிற்கு கீழ்ப்பட்டவர்களாகவும் காணப்படுவதால் பிள்ளைகளுடைய கல்விச் செயற்பாட்டில் அக்கறையின்மை உடையவர்களாகவே காணப்படுகின்றனர். சென்றவருடமும், இவ்வருடமும் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வகுப்புக்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**<u>தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு பகுப்பாய்வு</u>**

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|
| தோற்றியோர் எண்ணிக்கை | 6 | 11 | 11 | 13 | 15 | 14 |
| வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்தோர் எண்ணிக்கை | - | - | - | - | 02 | 01 |
| 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களின் எண்ணிக்கை | 01 | 02 | 01 | 01 | 06 | 05 |
| 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களின் எண்ணிக்கை | 03 | 05 | 02 | 06 | 09 | 11 |
| சித்தியடைந்தோர் சதவீதம் | 50% | 45% | 18% | 46% | 60% | 79% |

**வெட்டுப் புள்ளிகளுக்குமேல் பெற்று சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்தோர்**

**2016**

- கயூரா வரதராசன் - 160 புள்ளிகள்
- சந்திரகுமார் கஜமுகன் - 152 புள்ளிகள்

**2017**

- பரணிகா வரதராசன் - 155 புள்ளிகள்

மேலும்

- ர.சஜீமா
  தரம் 04 க்கான லண்டன் CWN 11plus maths challenge போட்டியில் பதக்கமும், சான்றிதழும், பணப்பரிசும் பெற்றுள்ளார்.

**இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

**போட்டிகளில் பங்கு கொண்டோர்.**

**2014 - சித்திரப்போட்டி**

- ர.சஜீமா (தரம் 1) - குடும்ப மட்டம் 2ஆம் இடம்
- வி.கஜீன் (தரம் 3) - குடும்ப மட்டம் 3 ஆம் இடம்
- சி.பிரியங்கன் (தரம் 4) - குடும்ப மட்டம் 1ஆம் இடம்
  கோட்ட மட்டம் 2ஆம் இடம்
- ச.சருன் (தரம் 5) - குடும்ப மட்டம் 5ஆம் இடம்
  கோட்ட மட்டம் 3ஆம்இடம்

**திருக்குறள் மனனப் போட்டி**

- கு.கிருசன் (தரம் 1) - குடும்ப மட்டம் 2ஆம் இடம்
- ச.கஜமுகன் (தரம் 3) - குடும்ப மட்டம் 3 ஆம் இடம்

## போட்டிகளில் பங்கு கொண்டு பாடசாலைக்குப் பெருமை சேர்த்தோர்

**2015 - சித்திரப்போட்டி**

- சி.பிரியங்கன் - குடும்ப மட்டம் 1ஆம் இடம்
- பொது அறிவுப்போட்டி குழு (தரம் 5) - குடும்ப மட்டம் 1ஆம் இடம்
- செயற்பட்டு மகிழ்வோம் போட்டி - குடும்ப மட்டம் 3ஆம் இடம்

**சதுரங்கப் போட்டி**

- இ.சங்கீதன் - கோட்ட மட்டம் 2 ஆம் இடம்
- வி. ராகவி - கோட்டமட்டம் 4 ஆம் இடம்
-

**2016ம் ஆண்டுக்குரிய செயற்பாடுகளில்**

14.01.2016 தரம் 01 மாணவர்களை உத்தியோகபூர்வமாக உள்வாங்கும் கால்கோள்விழா. வலயப் பிரதிநிதியாக சமூகவிஞ்ஞான சேவைக்கால ஆசிரியஆலோசகர் திரு. I.பாஸ்கரன் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

02.02.2016 வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி பாடசாலை மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. பழையமாணவர்கள், பெற்றோர்கள் சிறப்பித்திருந்தார்கள். பிரதம விருந்தினராக வலிகாமம் வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி.ரூபா உதயரட்ணம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

07.04.2016 நல்லிணக்க சகவாழ்வை உருவாக்குவதற்காக பன்மைத்துவ பண்பாடுகள் தொடர்பான தமிழ் சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் பொங்கல் நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன.

06.06.2016 யூன் - 5 உலக சுற்றாடல் தினம் தொடர்பான சிரமதான நிகழ்வுகள் மரநடுகை நிகழ்வுகள், காலைக்கூட்டத்தை தொடர்ந்து நடைபெற்றன.

24.06.2016 கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு யாழ்.மாவட்டத்தின் பல இடங்களையும் பார்வையிட்டிருந்தோம்.

08.07.2016 நாயன்மார்கள் வரிசையில் மாணிக்கவாசக சுவாமிகளது குருபூசைத்தினம் கொண்டாடப்பட்டது. தரம் - 04 மாணவர்களின் சுவாமிகள் பற்றிய நாடகம் சிறப்பாக அமைந்திருந்தது.

14.07.2016 பாடசாலையின் எல்லையாக அமைந்திருக்கும் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பஞ்சகுண்ட மகா கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டிருந்தோம். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், காலைப்பூஜை பிரார்த்தனையில் சகல மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டு வருகின்றோம்.

10.09.2016 போதைப்பொருள் ஒழிப்பு வார நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏதுவாக தரம் -04 மாணவர்களின் போதை ஒழிப்பு நாடகம் மேடையேற்றப்பட்டது.

01.10.2016 நவராத்திரி பூஜை ஆரம்பநாள் நிகழ்வுகள் வெகுசிறப்பாக நடைபெற்றிருந்தன.

03.10.2016 "மகிழ்வான சிறுவர் உலகை காண்பதற்காக நாம் கை கொடுப்போம்" தொனிப்பொருளில் சர்வதேச சிறுவர் தினவிழா பாடசாலை மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றிருந்தது.

06.10.2016 பழைய மாணவர்சங்க ஏற்பாட்டில் பெற்றோர்கள், மாணவர்கள் முன்னிலையில் உலக ஆசிரியர் தினவிழா நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றிருந்தன.

08.10.2016 நவராத்திரி விழாவினை ஒட்டி மாணவர்களிடையே மாலைகட்டுதல், கோலம் போடுதல், பேச்சுப்போட்டி, சகலகலாவல்லிமாலை மனனப் போட்டிகள் நடைபெற்றிருந்தன.

11.10.2016 நவராத்திரி விழாவின் இறுதிநாளாகிய விஜயதசமி நன்நாளில் மாணவர்களுடைய கலை நிகழ்ச்சிகளும், மானிப்பாய் சாயிசேவா நிலைய அதிபர் திருமதி.கலா சுந்தரேசன் அவர்களின் சமய சொற்பொழிவும் இடம்பெற்றிருந்தன.

**2016 போட்டி நிகழ்வுகளில் பங்குகொண்டு பாடசாலைக்கு பெருமை சேர்த்தோர்**

| இல | மாணவர் பெயர் | தரம் | போட்டி விபரம் | குடும்ப மட்டம் | கோட்ட மட்டம் |
|---|---|---|---|---|---|
| 01 | சு.ப.பவித்திரன் | 01 | சித்திரப் போட்டி | - | 3 |
| 02 | சு.லக்சனா | 02 | சித்திரப் போட்டி | 1 | 1 |
| 03 | ர.சஜீமா | 03 | சித்திரப் போட்டி | 3 | - |
| 04 | கு.கஜனி | 04 | சித்திரப் போட்டி | 1 | 1 |

**2017ம் ஆண்டுக்குரிய செயற்பாடுகளில்**

10.01.2017 - குரும்பசிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவ பெருநாளின் இரதோற்சவ நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டிருந்தோம்.

11.01.2017 - தரம் 01 மாணவர்களை உத்தியோகபூர்வமாக உள்வாங்கும் கால்கோள்விழா சிறப்பாக நடைபெற்றிருந்தது. சிறப்பு விருந்தினராக ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி.ஜெ.மயில்வாகனம் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

20.01.2017 "பல்லினத் தன்மையை மற்றும் பல்லினத்தன்மையின் அழகை ரசிப்போம்" தைப்பொங்கல் நிகழ்வுகள் வெகுசிறப்பாக தரம் - 01 மாணவர்களின் பெற்றோர்களின் சமூகமளிப்புடன் நடைபெற்றிருந்தன.

06.02.2017 பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றிருந்தன. பிரதம விருந்தினராக மாகாணசபை உறுப்பினர் கௌரவ திரு. கே.சிவாஜிலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

24.02.2017 குரும்பசிட்டி உதயதாரகை சனசமூகநிலைய அனுசரணையில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் கல்விக் கண்காட்சியொன்று வெகுசிறப்பாக நடைபெற்று அனைவரினதும் பாராட்டுக்களைப் பெற்றிருந்தது. பிரதம விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் திருமதி.ஜெ.மயில்வாகனம் கலந்து சிறப்பித்திருந்தார்.

28.02.2017 சிறுவர் துஸ்பிரயோகம், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றில் பலாலி பொலிஸ் நிலைய சார்ஜன்ட் திரு.T.சூரியகுமார் அவர்கள் கருத்துக்களை வழங்கியிருந்தார்.

24.06.2017 கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு யாழ்.மாவட்டத்தில் பல இடங்களையும் பார்வையிட்டோம்.

08.07.2017 குரும்பசிட்டி உதயதாரகை சனசமூகநிலைய ஆதரவில் அமரர்.நா.கதிர்காமநாதன் ஞாபகார்த்த தரம் - 05 மாணவர்களுக்கான "சுற்றாடல்சார் செயற்பாடுகள்" கண்காட்சி நடைபெற்றிருந்தது. பிரதம விருந்தினராக தெல்லிப்பளை கோட்டக்கல்வி அதிகாரி திரு.மா.ஆனந்தகுமார் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். அயற்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

28.07.2017 டெங்கு ஒழிப்பு சிரமதான நடவடிக்கைகள் பெற்றோர்கள், பலாலி பொலிஸ் பொறுப்பதிகாரியும் கலந்துகொண்டனர்.

21.09.2017 நவராத்திரி பூஜை தொடக்க விழா

26.09.2017 நவராத்திரி பூஜையை ஒட்டிய மாலைகட்டுதல், கோலம்போடுதல், மனனப்போட்டி, பேச்சுப்போட்டி நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன.

| | |
|---|---|
| 29.09.2017 | 'வாணிவிழா' வெகுசிறப்பாக நடைபெற்றிருந்தது. யா/ இளவாலை மெய்கண்டான் வித்தியாலய ஆசிரியர் திரு.க. சிவராசா அவர்களின் சமய சொற்பொழிவும் இடம்பெற்றது. மாணவர்களுடைய கலைநிகழ்வுகளில் மயில்நடனம், பாம்புநடனம் சிறப்பானதாக அமைந்திருந்தன. |
| 30.09.2017 | விஜயதசமி பூஜை, ஏடு தொடக்குதல் நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. |
| 02.10.2017 | சர்வதேச சிறுவர்தின நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றிருந்தன. |
| 06.10.2017 | பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் சர்வதேச ஆசிரியர்தின நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. |
| 07.11.2017 | வருடாந்த பரிசளிப்பு விழா |

## 2017 போட்டி நிகழ்வுகளில் பங்குகொண்டு பாடசாலைக்கு பெருமை சேர்த்தோர்

| இல | மாணவர் பெயர் | தரம் | போட்டி விபரம் | குடும்ப மட்டம் | கோட்ட மட்டம் |
|---|---|---|---|---|---|
| 01 | சு.பவித்திரன் | 02 | சித்திரப் போட்டி | 2 | - |
| 02 | | 02 | சிங்கள வினாடி வினா | - | 3 |
| 03 | ஜெ.ஜெனிபா | 02 | திருக்குறள் மனனம் | 3 | - |
| 04 | சு.லக்சனா | 03 | சித்திரப் போட்டி | 1 | - |
| 05 | ஜே.ஜெயப்பிரகாஸ் | 05 | சித்திரப் போட்டி | 2 | - |
| 06 | | 05 | பொது அறிவுப் போட்டி | 1 | - |
| 07 | ர.சஜீமா | 04 | CWN 11 Plus Maths Challenge (U.K) | பதக்கமும், சான்றிதழும், பணப்பரிசும் பெற்றார் | |

### பாடசாலையின் அடிப்படைத் தேவைகள்

பாடசாலையின் அடிப்படைத் தேவைகள் சிலவற்றை "அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" செயற்திட்டத்தினூடாக கடந்த ஆண்டு பாடசாலை சிறு திருத்த நிதி ரூபா 280,000இனூடாக பாடசாலை சுவர்கள் யாவும் வர்ணம் பூசப்பட்டு வகுப்பறைக் கதவுகள் சீர்செய்யப்பட்டு, கூரை மழைப்பீலிகள் போடப்பட்டன. மேலும் ஆண், பெண் ஆசிரியர்களுக்கான மலசலகூடத் தொகுதி ஒன்றும் மாணவர்களுக்கான கைகழுவும் இடம் (Water spot) ஒன்றும் புதிதாக அமைக்கப்பட்டன. இதற்காக ரூபா 696,000 நிதி வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாண்டு சகல வகுப்புக்களுக்குமான மின்இணைப்புக்களை அமைத்துக் கொள்வதற்காக ரூபா 175,000 நிதி வழங்கப்பட்டு அவ்வேலையும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. இருந்தபோதும் மேலும் சிலஅடிப்படைத் தேவைகள் தொடர்ந்தும் நிறைவு செய்யப்படாமலேயே இருந்து வருகின்றது.

1. வரும் வருடங்களில் பாடசாலை தரம் உயர்த்தப்பட்டு தரம் - 06 ஆரம்பிக்கப்படுமாயின் வகுப்பறைகள் கொண்ட கட்டடம் (60'x25' 2 storey Building) ஒன்று அமைக்கப்படுவது அவசியமாக காணப்படுகின்றது.
2. முறையான அதிபர் அலுவலகம் இல்லாமை. இருக்கும் அதிபர் அலுவலகம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.
3. எமது ஆசிரியர்கள் இளைப்பாறுவதற்கான ஒரு அமைவிடம் இல்லாமை.
4. பாடசாலைக்கு முறையான நூலகம் ஒன்று இல்லாமை.
5. நிரந்தரமான சமையல் அறைக்கூடம், களஞ்சியசாலை இல்லாமை.
6. பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 'சிறுவர் விளையாட்டு முற்றம்' இல்லாத நிலையே காணப்படுகின்றது.
7. மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவுவை சௌகரியமாக இருந்து உண்பதற்கான ஒரு இருப்பிடம் இல்லாமை.
8. கற்றல் கையேடுகளை பிரதிசெய்ய, அலுவலக நிர்வாக கடமைகளை பூர்த்திசெய்ய Photo copy இயந்திரம், கற்பித்தல் சாதனமான தொலைக்காட்சிப் பெட்டி எதுவுமே இல்லாமை.

இவ் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி உதவ வேண்டும் என்று சமூகத்தினரைக் கேட்டுக்கொள்கின்றோம்.

## நன்றியுரை

- இன்றைய பரிசளிப்புவிழாவில் கலந்து சிறப்பித்து மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி அவர்களுக்கு ஊக்கமளித்த பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருத்தினர்கள் ஆகியோருக்கு எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.
- இன்றைய இந்த விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- பாடசாலையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புக்களை நல்கி, அவ்வப்போது ஆலோசனைகளையும் வழங்கி, கண்காணித்து வரும் மதிப்பிற்குரிய வலயக் கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், வலய, கோட்ட உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.
- பாடசாலையில் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி நிதியுதவி மற்றும் பொருளுதவி செய்துவரும் ஊர்மக்கள் மற்றும் புலம்பெயர் சமூகத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- எமது பாடசாலையுடன் தொடர்ந்து நல்லுறவுகளைப் பேணி செயற்பட்டுவரும் பொது அமைப்புக்களான உதயதாரகை சனசமூக நிலையத்தினர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், சன்மார்க்க சபையினர், வளர்மதி சனசமூகநிலையத் தினர்களுக்கும் மற்றும் கிராம உத்தியோகத்தர், பொதுச்சுகாதார பரிசோதகர், பலாலி பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கும் எமது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- நிறைவாகப் பாடசாலையின் வளர்ச்சிக்காக என்னோடு இணைந்து பணியாற்றும் ஆசிரிய பெருந்தகைகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறி கலை நிகழ்வுகளை நெறியாள்கை செய்து வழங்கிய ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி நிறைவு செய்கின்றேன்.

---

# எமக்குக் கிடைக்கும் பாடசாலையின் வெளியீடுகள்





1975

பரமானந்தம் 01




1980




2000

பரமானந்தம் 02




2017 - பரமானந்தம் 03




# குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் மகா வித்தியாலய வரலாறு

ஒரு கிராமத்தின் கல்வி வளர்ச்சிப் போக்கிற்கு அடிப்படைக் காரணியாக அமைவது அக்கிராமத்தில் உள்ள பாடசாலைகளே. இவ்வாறு குரும்பசிட்டி மக்களின் கல்வி வளர்ச்சியில் இரு பாடசாலைகள் முக்கியம் பெறுகின்றன. அவை, பொன்னையர் பாடசாலை என அழைக்கப்பட்ட யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும், மகாதேவா வித்தியாலயம் என அழைக்கப்பட்ட பொன்.பரமானந்தர் மகாவித்தியாலயமும் ஆகும்.

1879ம் ஆண்டு அவதரித்த பொன்.பரமானந்தர் அவர்கள் குரும்பசிட்டி மக்களின் கல்வித்தேவையை உணர்ந்து சைவத் தமிழ்க்கலவன் பாடசாலை என்று அழைக்கப்பட்ட இப்பாடசாலையை 1900ஆம் ஆண்டு தனது 20வது வயதிலேயே ஆரம்பித்தார். எந்தவிதமான வருமானமும் இன்றி முதல் இரண்டு வருடங்களும் இப்பாடசாலையை நடாத்தி வந்தார். 1902இல் இப்பாடசாலை அரசாங்க அங்கீகாரம் கிடைக்கப்பெற்று ஆண்டுக்கொருமுறை அரசின் நன்கொடை பெறும் பாடசாலையாக மாறியது. அவ்வாறு கிடைக்கும் பணத்தைக் கொண்டுதான் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கல், தளபாடங்கள் செய்தல், கட்டடத்திருத்தம், வேலிகள் அடைத்தல் முதலான சகல பணிகளையும் வருடம் முழுவதும் செய்ய வேண்டியிருந்தது.

பரமானந்தர் அவர்கள் குரும்பசிட்டி மக்களின் கல்விநிலையினை உயர்த்த வேண்டும் என்று அயராது உழைத்தார். இவரே இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். இவர் வீடுவீடாகச் சென்று மாணவர்களை வரவழைத்தும், இரவு, பாடசாலையில் தங்கவைத்தும் கல்வியைப் போதித்தார். பாடசாலைக்கு வராத மாணவர்களை வீட்டுக்கு தேடிச்சென்று அழைத்து வந்து கல்வியைப் போதித்தார். அத்தோடு மாணவர்களிடம் எந்தவித ஊதியமும் அறவிடாது மாலைநேர வகுப்புக்களை ஆசிரியர்களைக் கொண்டு நடாத்தினார்.

பரமானந்தரது அயராத முயற்சியினால் பாடசாலையின் கல்வித்தரம் உயர்ந்தது. கல்வித்தரம் உயர, வகுப்புக்கள் அதிகரித்தது. வகுப்புக்கள் அதிகரிக்க பூநகரி, சாவகச்சேரி, மட்டுவில், நாவற்குழி, அச்சுவேலி, காங்கேசன்துறை, கட்டுவன், குப்பிளான், வயாவிளான், பலாலி போன்ற இடங்களிலிருந்து பல மாணவர்கள் இப்பாடசாலையில் இணைந்து சைவச் சூழலில் கல்வி கற்கலாயினார்கள். இப்பாடசாலையில் அரிவரி வகுப்பு முதல் ஆசிரிய மாணவர் வகுப்பு வரைக்கும் வகுப்புக்கள் இருந்தன. இப்பாடசாலையில் அட்சர கணிதம், கேத்திர கணிதம், எழுத்து, வாசிப்பு, இலக்கணம், சமயம், நாட்டுச்சீவன சாஸ்திரம், சரித்திரம், பூமிசாஸ்திரம், ஆங்கிலம், சித்திரம், சங்கீதம், சுகாதாரம் தையல், கைப்பணி, உடல்நலக்கல்வி, பொதறிவு ஆகிய பாடங்கள் இங்கு போதிக்கப்பட்டன. இப்பாடங்களுடன் கோலாட்டம், ஆடல், நாடகம், புராணங்களுக்கு உரை சொல்லும் முறை என்பனவும் போதிக்கப்பட்டது. பாடசாலையில் இந்து வாலிபர் சங்கம் ஒன்று நிறுவப்பட்டு மாதந்தோறும் பூரணை நாளில் சமய அறிஞர்களை வரவழைத்து சொற்பொழிவுகள் நடாத்தப்பட்டது. இப்பாடசாலையில் மாணவர் சங்கவிழா, பரிசளிப்பு விழா, தமிழ்விழா, நவராத்திரி விழா போன்ற வருடாந்த விழாக்களும் சுகாதாரவாரம், விளையாட்டுப்போட்டி என்பனவும் நடைபெற்றன. இப்பாடசாலை மாணவர்களுக்கு கோலாட்டத்தை ஒரு தனித்துவமான கலையாக பயிற்றுவித்தவர் பரமானந்தர். கயிற்றுக் கோலாட்டம் இப்பாடசாலைக்கே தனித்துவமான ஒரு நிகழ்வாக இருந்தது. மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் வந்தபோது நடைபெற்ற விழாக்களிலும், பிரபலநிகழ்ச்சிகளிலும், பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த விழாக்களிலும் இக்கோலாட்டத்தை பரமானந்தர் அவர்கள் அடிப்பித்து வந்தார்.

மேலும் இப்பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவாக மரவள்ளிக்கிழங்கும் சம்பலும் இலவசமாக பாடசாலை முகாமையாளர்களின் உதவியுடன் வழங்கப்பட்டது.

இப்பாடசாலையில் பிரவேச பண்டிதர் பரீட்சைக்குரிய பாடங்களும் கற்பிக்கப்பட்டதாக வித்துவசிரோன்மணி பிரம்மஸ்ரீ கணேசையர் அவர்கள் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து அக்காலத்தில் இப்பாடசாலையில் பண்டித பரீட்சைக்குரிய வகுப்புக்களும் நடைபெற்று வந்தமையை அறிய முடிகின்றது.

ஆரம்பத்தில் சைவத்தமிழ் கலவன் பாடசாலை என வழங்கப்பட்ட இப்பாடசாலையின் பெயர் 1919ல் பரமானந்தரது மகன் மகாதேவன் பிறந்த பின்னர் மகாதேவா வித்தியாசாலை என்று பெயர் மாற்றம் பெற்றது. 1975ல் மகாதேவா வித்தியாசாலை என்ற பெயர் கைவிடப்பட்டு பொன்.பரமானந்தர் வித்தியாலயம் என அழைக்கப்படலாயிற்று. 1946ம் ஆண்டில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் தொடங்கியதும், ஆரம்ப பாடசாலையாக இருந்த பாடசாலையை படிப்படியாக ஏனைய வகுப்புக்களையும் ஆரம்பித்து மாணவர்களின் எண்ணிக்கையையும், ஆசிரியர்களினது எண்ணிக்கையையும் அதிகரித்து துரித வளர்ச்சியடையச் செய்து இன்றைய பொன்.பரமானந்தர் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்படுவதற்கு மூலகாரணமானவர் அதிபர் திரு.மு.க.சுப்பிரமணியம் அவர்கள். அவரது நிர்வாக திறமைக்கு சான்றாக 1974ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14, 15,16ந் திகதிகளில் தொடர்ச்சியாக 3 தினங்கள் பாடசாலையில் நடைபெற்ற சிறந்த பொருட்காட்சியை குறிப்பிடலாம். இவரது காலத்தில் பொன்.பரமானந்தர் வித்தியாலயம், பல துறைகளிலும் துரித வளர்ச்சியடைந்து, காங்கேசன்துறை வட்டாரப் பாடசாலைகளில் சிறந்த பாடசாலையாக விளங்கியதாக திரு.க.கா.சோமசுந்தரன் (வட்டார வித்தியாதரிசி காங்கேசன்துறை, முதலாந்தர ஆங்கில விரிவுரையாளர், பலாலி ஆசிரியர்கலாசாலை) அவர்கள் 'பரமானந்தம்' சிறப்பு மலருக்கு வழங்கிய விழாச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

இவரது தலைமையில், பாடசாலை 75வது வருடத்தினை எய்திய நிறைவுவிழாவும், 'பரமானந்தம்' சிறப்பு மலர் வெளியீடும் 1975ம் ஆண்டு வெகு சிறப்பாக நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. பிரதம விருந்தினராக மாண்புமிகு திரு.S.J.V செல்வநாயகம் அவர்கள் (பாராளுமன்ற உறுப்பினர் காங்கேசன்துறை) கலந்து சிறப்பித்திருந்தார்.

எண்பது ஆண்டுகளாக சிறப்புடன் செயற்பட்டு வந்த இப்பாடசாலையின் வளர்ச்சி நிலையை அவதானித்த கல்வித்திணைக்களம் 01.02.1980ல் வழங்கிய தரஉயர்வின் பேறாக பொன்.பரமானந்தர் மகாவித்தியாலயம் என்ற இன்றைய பெயரைப் பெற்றது.

ஸ்தபாகர் பொன்.பரமானந்தருடைய நூற்றாண்டு விழாவினையும் பாடசாலை தரமுயர்வு விழாவினையும் 01.04.1980ல் அப்போதைய பாடசாலை அதிபர் திரு.சி.கனகசுந்தரம் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மாண்புமிகு.திரு.அ.அமிர்தலிங்கம் அவர்கள் (பாராளுமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர்) கலந்து சிறப்பித்தமையும் நிகழ்வையொட்டிய 'விழாச் சிறப்புமலர்' ஒன்றும் வெளியிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

குரும்பசிட்டி மண்ணில் பிறந்தவர்கள் அனைவரும் இப்பாடசாலையில் கல்வி கற்றவர்கள் ஆவார்கள். அத்தோடு பெரும்பாலான குரும்பசிட்டி ஆசிரியர்கள் இப்பாடசாலையிலேயே கல்வியைப் போதித்து வந்தனர். இங்குசேவையாற்றிய ஆசிரியர்களது அயராத உழைப்பினால் பல உத்தியோகத்தர்கள் இக்கிராமத்தில் தோன்றலாயினர். இதனால் வீட்டுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை குரும்பசிட்டியில் காணப்பட்டது.

குரும்பசிட்டி மக்கள் யுத்த சூழ்நிலையால் இடம்பெயர்வதற்கு முன் உள்ள காலப்பகுதி குரும்பசிட்டியில் ஓர் அறிவுப்புரட்சி நடைபெற்ற காலமாக கொள்ளப்படுகின்றது. இடப்பெயர்வுக்கு முன்னுள்ள காலத்தில் இப்பாடசாலையில் திரு.பொன்.பரமானந்தர் (குரும்பசிட்டி), திரு.சீ.கணபதிப்பிள்ளை (குரும்பசிட்டி), திரு.சீ.வைத்திலிங்கம் (குரும்பசிட்டி), திரு.த.கனகசபை (மட்டுவில்), திரு.சீ.தம்பிப்பிள்ளை (குரும்பசிட்டி), திரு.மு.க.சுப்பிரமணியம் (குரும்பசிட்டி), திரு.சீ.தாமோதரம்பிள்ளை (புன்னாலைக்கட்டுவன்), திரு.வை.பொன்னையா (பன்னாலை), திரு.சி.கனகசுந்தரம் (குரும்பசிட்டி), திரு.த.சிவராசா (கட்டுவன்) ஆகிய பத்து அதிபர்கள் இங்கு கடமையாற்றியுள்ளனர். மேற்கூறிய அதிபர்களில் ஆறுபேர் குரும்பசிட்டியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பரமானந்தரது மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1983ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட யுத்த சூழ்நிலையின் விளைவாக குரும்பசிட்டிக் கிராமம் ஒரு பலப்பரீட்சை நடாத்தும் ஒரு கேந்திர போர்முனையாக மாறியது. இதனால் 1986ல் இருந்து இக்கிராமத்தை விட்டு மக்கள் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் பாடசாலை இராணுவ முகாம் ஆகியது. இவ் இடப்பெயர்வினால் பொன்.பரமானந்தர் மகாவித்தியாலயம் முதலில் ஏழாலை மகாவித்தியாலயத்திலும் பின்பு குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் இயங்கி வந்தது. இதனால் மாணவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இக்காலப்பகுதியில் திரு.த.சிவராசா இப்பாடசாலையின் அதிபராக விளங்கினார்.

இதனைத் தொடர்ந்து இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின் 10.08.1987ல் குரும்பசிட்டி மக்கள் ஊர்செல்லும் நிலை ஏற்பட்டது. பொன்.பரமானந்தர் மகா வித்தியாலயம் கூரைகள் இல்லாது வெறுங்கட்டடமாகக் காட்சியளித்தது. பாடசாலையைப் புனரமைப்பதற்கு கல்வித்திணைக்களம் உதவி வழங்க முடியாத நிலையில் இருந்தவேளை குரும்பசிட்டி

பிரஜைகள் குழு, பொதுமக்களிடையே கடன்பெற்று பாடசாலையைத் திருத்தி 1987ல் விஜயதசமி அன்று மீண்டும் பாடசாலை இயங்க ஆரம்பித்தது. மீண்டும் குரும்பசிட்டியில் பாடசாலை தலைநிமிர தொடங்கியவேளை 1990ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் மீண்டும் போர்ச் சூழலால் குரும்பசிட்டி மக்கள் முற்றாக இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பொன்.பரமானந்தர் மகாவித்தியாலயம் மீண்டும் இடம்பெயர்ந்து மயிலணி மகாவித்தியாலயம், மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில், யூனியன் கல்லூரி பாடசாலையின் அரவணைப்பில் இயங்கி வந்தது. இக்காலப்பகுதியில் திரு.சு.தனையசிங்கம் (கட்டுவன்), திரு.க.சிவதாசன் (குரும்பசிட்டி), திரு.க.செல்வரத்தினம், திரு. சோ.இராமநாதன் (வீமன்காமம்) ஆகியோர் அதிபர்களாக விளங்கினார்கள்.

08.07.2001ல் பழையமாணவர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு "பாடசாலையின் நூற்றாண்டு நிறைவு விழா" உரும்பிராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் அப்போதைய பாடசாலை அதிபர் திரு.க.சிவதாசன் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பளை கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.A.V.கணேசலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்தமையும், நிகழ்வினை ஒட்டிய "பரமானந்தம் நூற்றாண்டு நிறைவு மலர்" ஒன்றும் வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பின்னர் சிறிதுகாலம் இப்பாடசாலை தெல்லிப்பளை கோட்டக்கல்வி அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு, தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது. பின்னர் மீண்டும் போர் முடிவுக்கு வந்ததும் குரும்பசிட்டிக் கிராமம் மீள் எழுச்சி கண்டநிலையில் 2011ம் ஆண்டு விஜயதசமி நன்னாளில் பாடசாலை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு குரும்பசிட்டி மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

**அரும்பணியாற்றிய அதிபர்கள்**

| | பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 1. | திரு.பொன்.பரமானந்தர் | 05.1900 | 08.12.1939 |
| 2. | திரு.சீ.கணபதிப்பிள்ளை | 01.01.1940 | 19.10.1960 |
| 3. | திரு.சீ.வைத்திலிங்கம் | 20.10.1960 | 31.01.1962 |
| 4. | திரு.த.கனகசபை | 01.02.1962 | 31.01.1966 |
| 5. | திரு.சி.தம்பிப்பிள்ளை | 01.02.1966 | 07.01.1968 |
| 6. | திரு.மு.க.சுப்பிரமணியம் | 19.01.1968 | 26.03.1977 |
| 7. | திரு.சீ.தாமோதரம்பிள்ளை | 28.03.1977 | 26.07.1977 |
| 8. | திரு.வை.பொன்னையா | 27.07.1977 | 19.09.1978 |
| 9. | திரு.சி.கனகசுந்தரம் | 20.09.1978 | 18.02.1986 |
| 10. | திரு.த.சிவராசா | 01.03.1986 | 01.01.1990 |
| 11. | திரு.சு.தனையசிங்கம் | 02.01.1990 | 14.04.2000 |
| 12. | திரு.க.சிவதாசன் | 14.04.2000 | 10.10.2001 |
| 13. | திரு.க.செல்வரத்தினம் | 10.10.2001 | 08.08.2003 |
| 14. | திரு.சோ.இராமநாதன் | 09.08.2003 | 01.03.2009 |

02.03.2009 முதல் பாடசாலை தெல்லிப்பளைக் கோட்டக்கல்வி அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு தற்காலிகமாக மூடப்பட்டது.

போர் முடிவுக்கு வந்து 2011ஆம் விஜயதசமி நன்னாளில் பாடசாலை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு குரும்பசிட்டி மக்களிடம் ஒப்படைக்கப்பட்டு தனது சொந்த இடத்தில் மீண்டும் 12.01.2012 முதல் இயங்கத் தொடங்கி வருகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 15. | திரு.இ.தேவராசா | 12.01.2012 | 10.08.2015 |
| 16. | திருமதி.யோ.சுப்பிரமணியம் | 10.08.2015 | 12.01.2016 |
| 17. | திரு.பொ.ரவிச்சந்திரன் | 13.01.2016 | |

2012ஆம் ஆண்டு தைமாதம் 12ம் திகதி இப்பாடசாலை மீண்டும் இயங்கத் தொடங்கியது. இப்பாடசாலையின் அதிபராக திரு.இ.தேவராஜா(குரும்பசிட்டி) நியமிக்கப்பட்டார்.

தனது 20வது வயதில் இப்பாடசாலையை ஆரம்பித்த பொன்.பரமானந்தர் குரும்பசிட்டியின் தலைமகன், தவப்புதல்வன் தனது வாழ்நாளை ஊருக்காகவே அர்ப்பணித்த மாமனிதர். வீடுவீடாகச்சென்று மாணவர்களை வரவழைத்து பாடசாலையில் தங்கவைத்து கல்வி புகட்டியவர்.

கடந்த நூற்றாண்டு காலத்தில் குரும்பசிட்டி மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் பொன்.பரமானந்தர் பாடசாலையில் கல்வி கற்றவர்களாவார். சிறப்பாக இங்கு ஆரம்பக் கல்வியைக் கற்காதவர்கள் எவருமில்லை என்றே சொல்லலாம். அனைவரினதும் உயர்ச்சிக்கான அடித்தளத்தை அமைத்தது இவ்வறிவாலயமே. எனவேதான் கிராமத்திலுள்ள ஆலயங்களைப் போல இவ்வறிவாலயத்தையும் பொதுமக்கள் மதித்து வந்தனர். மதித்து வருகின்றனர்.

இவ்வறிவாலயம் 1990 இடப்பெயர்வுக்குப் பின்பும் 2008ம் ஆண்டு வரை க.பொ.த(சா/த) வகுப்புவரை வெவ்வேறு பாடசாலைகளில் இயங்கிக் கொண்டிருந்தது. தற்போது 2012 மீள்குடியேற்றத்தின் பின்னர் தரம் 01முதல் - 05வரை தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றது. இவ்வறிவாலயம் மீண்டும் க.பொ.த(சா/த) வகுப்புவரை உயர்ச்சி பெற கல்விப் பணியில் அக்கறையுடையோர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டி நிற்கின்றோம்.

## 2011 இல் இராணுவக்கட்டுப்பாட்டில் இருந்து பாடசாலை விடுவிக்கப்பட்டபோது...





2011 ஐப்பசி மாதம் விஜயதசமி நன்நாளில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ஹத்துரு சிங்க அவர்களால் அப்போதைய அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் முன்னிலையில் பாடசாலையின் மீள் உருவாக்கத்திற்கு காரணமாகவிருந்த மீள் எழுச்சியின் தந்தை திரு.ஆ.சி.நடராஜா அவர்களிடம் பாடசாலை ஒப்படைக்கப்பட்டபோது...



## 2012 இல் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது...










# அந்தநாள் ஞாபகம் ....

## பாடசாலை நிகழ்வுகளின் கிடைத்தற்கரிய புகைப்படங்கள்











# பாடசாலை நிகழ்வுகளின் கிடைத்தற்கரிய புகைப்படங்கள்









1978-1979 களில் ஆசிரியை திருமதி செல்லம்மா கனகசுந்தரம் அவர்களுடன் மாணவ முதல்வர்கள்



# மகாத்மா காந்தி



1. நான் விரும்பும் பெரியார் மகாத்மா காந்தி ஆவார்.
2. இவர் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர்களுள் ஒருவர்.
3. இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் மோகனதாஸ் காந்தி ஆகும்.
4. இவர் தமது இளம்பிராயத்தில் அரிச்சந்திரன் நாடகம், சிரவணன் நாடகம் என்பவற்றைப் பார்த்து நல்லொழுக்கங்களைக் கடைப் பிடிப்பவராகவும் உண்மையை பேசுவராகவும் விளங்கினார்.



5. இவருக்கு பெற்றோர் அக்கால வழக்கப்படி கஸ்தூரிபாயை திருமணம் செய்து வைத்தனர்.
6. இவர் தமது இளம் பிராயத்தில் சட்டக்கல்வி கற்பதற்காக இங்கிலாந்து சென்றார்.
7. மூன்றாண்டுகள் முயன்று கற்று "பரிஸ்டர்" பட்டம் பெற்று இந்தியாவிற்கு திரும்பினார்.
8. சிறிது காலம் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார்.
9. ஒரு வழக்கு தொடர்பாக தென்னாபிரிக்காவிற்குச் சென்றார்.
10. சத்தியாக் கிரக வழியில் நின்று துயர் துடைக்க முனைந்தார். அதில் வெற்றியும் கண்டார்.

**கு.கயனி, தரம் - 05**

# விடுகதைகள்



1. அவனுக்கு ஒருமுறை பல்விழுந்தால் மறுமுறை முளைக்காது அவன் யார்?
   **சீப்பு**
2. அன்றாடம் தீப்பிடிக்கும் அறியாத மாளிகையில் அறுசுவை விருந்து தருகிறது அது எது?
   **அடுப்பு**
3. அள்ளவும் முடியாது கிள்ளவும் முடியாது அது எது?
   **காற்று**
4. நிற்காமல் ஓடுபவனை துரத்திப்பிடிக்க ஆளில்லை அவன் யார்?
   **ஆறு**
5. சீருடையில்லாத காவலாளி சம்பளம் கேட்காத காவலாளி அவன் யார்?
   **நாய்**
6. வில்லாய் வளைபவன் ஒருபோதும் ஓடிந்து போகமாட்டான் அவன் யார்?
   **நாணல்**
7. ஆகாயத்துக்கும் பூமிக்கும் ஒரே சங்கிலி அது என்ன?
   **மழை**
8. அள்ள அள்ள பெரிதாகும்அது என்ன?
   **பள்ளம்**
9. இரண்டு கால்கள் இருப்பவனை விழாமல் பிடித்துக்கொள்ள வேண்டும் அ
   **ஏணி**
10. அந்தியில் வருவான் அதிகாலையிலே மறைவான் அவன் யார்?
    **இருள்**



**றோ.யஸ்ரின்**
**தரம் - 05**

# ஆசான்



ஆசான் எங்கள் ஆசான்
அறிவை ஊட்டும் ஆசான்
நேசம் பாசம் காட்டி
நெஞ்சில் வைக்கும் ஆசான்

எமக்காகப் பாடுபட்டு
உழைக்கும் ஆசான்
எம்மை உயரவைக்க
ஆசைப்படும் ஆசான்

பாரினிலே உயர்ந்திட
பட்டத்திலே வாழ்த்தி
வாழவைக்கும் ஆசான்
அன்போடு வாழும் ஆசான்

கல்வியிலே வாழ்வு
என்று கூறும் ஆசான்
நாம்படிப்பதற்கு
கல்வி கூறும் ஆசான்
என்மடியில் உன்னைத் தூக்க வைக்க
ஒருவாழ்வு தருவாயாக!



ம.ரிசானி
தரம் - 05

# பொது அறிவு






1. அதிக நீர் அருந்தும் பறவை?
   **புறா**
2. நாய்க் குடும்பத்திலுள்ள மிகச்சிறிய உயிரினம்?
   **நரி**
3. பிறந்த அன்றே இறக்கும் உயிரினம்?
   **ஈசல்**
4. பருந்தின் ஆயுட்காலம்?
   **100 ஆண்டுகள்**
5. காலைப் பிடித்து துக்கினால் இறக்கும் பிராணி?
   **தாரா**
6. மூன்று இரப்பைகளைக் கொண்ட விலங்கினம்?
   **ஒட்டகம்**
7. மிகச்சிறிய இதயம் உள்ள விலங்கு?
   **சிங்கம்**
8. மிகச்சிறிய முட்டை இடும்பிராணி?
   **தேன்சிட்டு**
9. தலையில்லாமல் ஒன்பது நாள் வாழும் உயிரினம்?
   **கரப்பான்பூச்சி**
10. மிக வேகமாக செல்லும் பாம்பினம்?
    **பிளாக்மாம்பா**
11. வெள்ளை நிறத்தை கண்டு அஞ்சும் விலங்கு?
    **புலி**
12. கருவுறாத முட்டைகளை இடும் உயிரினம்?
    **குளவி**
13. 2700 சுவை நரம்புகள் உள்ள மீனினம்?
    ஊயவகனளா
14. உலகிலேயே மிக மெதுவாக நடக்கும் பாலூட்டி.
    **கடலாமை**
15. மீகநீண்ட ஆயள்கொண்ட விலங்கினம்?
    **நீலத்திமிங்கலம் (500 ஆண்டு)**

சி.கமுன்சிகா,
தரம் - 05

# உங்களுக்குத் தெரியுமா?



1. சூரியன் மறையும்நாடு எது?
   **பிரித்தானியா**
2. சூரியன் உதிக்கும் நாடு எது?
   **ஜப்பான்**
3. மரகதத் தீவு எனப்படும் நாடு எது?
   **அயர்லாந்து**
4. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது?
   **நோர்வே**
5. புனிதநாடு எனப்படும் நாடு எது?
   **பாலஸ்தீனம்**
6. ஆயிரந் தடாகங்களின் நாடு எனப்படுவது எது?
   **பின்லாந்து**
7. உலகின் கூரை எனப்படுவது எது?
   **திபெத்**
8. மஞ்சளாறு என அழைக்கப்படும் ஆறு எது?
   **குவாங்கோ நதி**
9. இருண்ட கண்டம் என அழைக்கப்படும் கண்டம்?
   **ஆபிரிக்கா**
10. வெள்ளையனின் கல்லறை எனப்படும் கடற்கரை?
    **கினி கடற்கரை**



**J.ஜெயப்பிரகாஸ்,**
**தரம் - 05**

# அறிந்து கொள்வோம்



**இலங்கையின் ஆதிவாசிகள்.**

1. இரத்தினபுரி, பாஹித்தல, பதிவிக பொல போன்ற இடங்களில் வேடுவர்கள் வாழ்ந்தார்கள்.
2. இன்று மகியங்கனை தம்பள, சொரபொரவெல போன்ற இடங்களில் வேடுவர்கள் வாழ்கிறார்கள்.
3. "சபர, முலிந்த" போன்ற சொற்கள் இவர்களையே குறிக்கின்றது.
4. கிரி கொரங்க இவர்களின் வழிபாட்டு நடனம் ஆகும்.
5. மகியங்கனை பெரஹர(வேடுவ ஊர்வலம்) இன்று மகியங்கனையில் நடை பெறுகிறது.
6. களிமண்சுவர் அமைத்து இலுக் என்னும் புற்களால் கூரை வேந்து வாழ்கின்றார்கள்.
7. வேடுவர்களின் புனித நூல் யாக்பொல் என்பதாகும்.
8. இறந்தவர்கள் பேய்களாக மாறுவார்கள் என நம்புகிறார்கள்.
9. வீட்டுக்கு வருகின்றவர்களுக்கு வெற்றிலை கொடுத்துவரவேற்கின்றனர்.
10. வேடுவர்கள் அதிகமாக வாழ்ந்தமையாலேயே இரத்தினபுரிப்பகுதி சப்ரகமுவ என அழைக்கப்படுகின்றது.



**றா.அக்சனா**
**தரம் - 05**



## உயர்வுதரும் மூன்று



அன்னை என்னும் மூன்று எழுத்தில் பிறந்தோம்.
அன்பு என்னும் மூன்று எழுத்தால் வளர்ந்தோம்.
பள்ளி என்னும் மூன்று எழுத்தில் சேர்ந்தோம்.
கல்வி என்னும் மூன்று எழுத்தினை கற்றோம்.
போட்டி என்னும் மூன்று எழுத்தினை எதிர் கொண்டு
வெற்றி என்னும் மூன்று எழுத்தினை அடைந்தோம்.
சாதனை என்னும் மூன்று எழுத்தினை அடைந்தோம்.

**வ.பரணிகா**
**தரம் - 05**

## My school



1. My school name is J/Ponparamanathar Maha vidyalayam.
2. It was founded in 1900.
3. My school founder name is Mr.Pon.Paramananthar.
4. There are 07 Teachers and 80 students.
5. My school is a child friendly school.
6. It is a small school.
7. It is a mixed school.
8. It is in Thellipalai division and Valigamam zone.
9. The name of our principal is Mr.P.Ravichandran.
10. I love my school very much.



**S.Tharmilan**
**Grade - 05**

## My friend





1. My friend name is V.Paranika.
2. She is ten years old.
3. She is in grade five.
4. She study at J/Pon.Paramanathar Maha Vidyalayam.
5. Her favourite subject is English.
6. Her hobby is reading story books.
7. Her favourite colour is red.
8. She likes cake.
9. She wants to become a teacher.
10. I like my friend and she also like me.

**A.Abisha**
**Grade - 05**

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சையின் வெற்றியாளர்கள் -2016



வ.கயூரா
160 புள்ளி



ச.கஜமுகன்
152 புள்ளி

## தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சையின் வெற்றியாளர் -2017



வ.பரணிகா
155 புள்ளி




ர.சஜீமா
தரம் 04 க்கான லண்டன் CWN 11 plus maths challenge போட்டியில் பதக்கமும், சான்றிதழும், பணப்பரிசும் பெற்றுள்ளார்.

# 2016 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுடன் ஆசிரியர் குழாம்





# 2017 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுடன் ஆசிரியர் குழாம்



2012 இல் இந்தியாவின் தமிழ்நாட்டில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆசிரியர் மகாநாட்டில் சிறந்த கட்டுரையாளராக தெரிவு செய்யப்பட்டு விருது பெற்ற எமது ஆசிரியர் திருமதி வலன்ரீனா இளங்கோவன்



2017 வடமாகாண "குரு பிரதீபா பிரபா" நல்லாசிரியர் விருது பெற்ற எமது ஆசிரியர் திருமதி வலன்ரீனா இளங்கோவன்




எமது பாடசாலையின் கணனிக் கூடம்



எமது பாடசாலையின் நூலகம்



## எனது செல்லப்பிராணி



எனது செல்லப்பிராணி நாய் ஆகும். அதற்கு நான் பப்பி என பெயர் வைத்துள்ளேன். அது என்மீது அதிக அன்பு வைத்துள்ளது. நான் தினமும் உணவு உண்ணும் போது பப்பிக்கும் உணவு கொடுப்பேன். நான் பாடசாலை விட்டு வீடுசெல்லும் போது பப்பி எனக்காக வீட்டுவாசலில் காத்து இருக்கும். என்னைக் கண்டதும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கும். இரவில் நாங்கள் உறங்கிய பின்னர் பப்பி விழித்திருந்து எமது வீட்டைக் காக்கும். நான் எனது உயிர் உள்ளவரை பப்பியை மறக்க மாட்டேன்.



**மோ.கிஷோர்**
**தரம் - 04**

## எனது கிராமம்



எனது கிராமத்தின் பெயர் குப்பிளான். இயற்கை அழகு நிறைந்த கிராமம். பச்சைப் பசேல் என காணப்படும் பல தோட்டங்களை கொண்டுள்ளது. எனது கிராமத்தில் பல ஆலயங்கள் உள்ளன. எனது கிராமம் பார்ப்போரை கவரும் அழகான கிராமமாகும்.



**பி.குபேரன்**
**தரம் - 02**

## நான் வணங்கும் தெய்வம்



1. நான் வணங்கும் தெய்வம் எனது அம்மா ஆவார்.
2. எனது அம்மாவின்பெயர் திருமதி. சசிரேகா ஆகும்.
3. அவர் என்மீது அதிக அன்பும் அக்கறையும் கொண்டவர்.
4. நான் பாடசாலை செல்வதற்கு மிகவும் அக்கறையுடன் அனுப்பி வைப்பார்.
5. எனக்கு ஊட்டச் சத்துள்ள உணவுகளைத் தருவார்.
6. நல்ல பழக்கவழக்கங்களைச் சொல்லித் தருவார்.
7. நல்ல பிள்ளையாய் வாழ வழிகாட்டுபவர் எனது அம்மா.



**க.பவித்திரன்**
**தரம் - 04**

## My Village



1. My village name is Kurumpasiddy.
2. It is in Tellipalai Division
3. It is a Re-Settle area.
4. There are School, Post -Office, Hospital, Library, Kovil Shops in my village.
5. My Village is very beautiful.
6. I love my village.



**R.Sajeema**
**Grade - 4**

## நாம் இலங்கையர்






1. எமது தாய்நாடு இலங்கை
2. நான் எனது நாட்டை நேசிக்கிறேன்.
3. எமது நாடு இயற்கை வளங்களைக் கொண்டது.
4. எம் நாட்டில் உள்ள அனைவரையும் மதித்து வாழவேண்டும்.
5. இது நான்கு புறங்களும் கடலால் சூழப்பட்ட தீவு ஆகும்.
6. இலங்கையில் சிங்களவர், முஸ்லீம், தமிழர், பறங்கியர் என இனத்தவர்கள் வாழ்கின்றார்கள்.
7. இலங்கையை பல பெயர்களால் அழைப்பர்.
8. நாங்கள் இலங்கைநாட்டை மேம்படுத்துவதற்கு ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.
9. எமது நாடு மிகவும் அழகானது.

**த.தபிஷானிக்கா**

**தரம் - 03**

## அம்மா





- அம்மா மிகவும் நல்லவர்.
- அம்மா எனக்குப் பாடம் சொல்லித் தருபவர்.
- அம்மா எனக்கு அன்பு காட்டுவார்.
- என்னைக் கண்ணுங் கருத்துமாய் பாதுகாப்பவளே என் அம்மா.
- எனக்கு நல்வழியைச் சொல்லித்தருபவளே என் அம்மா.
- எனக்கு நல்ல பழக்கவழக்கங்களைச் சொல்லித் தருபவளே என் அம்மா.
- அம்மா என்னைப் பாடசாலைக்கு கூட்டிச் செல்வார்.
- என்னைத் தீய வழியிலிருந்து காப்பவளே என் அம்மா.
- அம்மா தன்வேதனைகளை எம்மிடம் சொன்னால் வேதனைப் படுவோம் என்று தன் மனதுக்குள் மூடி வேதனைப்படுவாள் அம்மா.
- அம்மா எங்களுக்கு நல்ல புத்தியைச் சொல்லித்தருவார்.

**ஸ்.தர்சன்**

**தரம் - 03**

## பூக்கள்





சின்னச் சின்னப் பூக்கள்
சிவப்பு நிறமான பூக்கள்
எனக்குப் பிடித்த பூக்கள்
வீட்டில் வைக்கும் பூக்கள்

மகிழ்ச்சி தரும் பூக்கள்
நிறையப் பூக்கும் பூக்கள்
நீல நிறமான பூக்கள்
வண்ண வண்ண பூக்கள்

வடிவாய் பூக்கும் பூக்கள்
அழகு நிறைந்த பூக்கள்
காலையில் விரிந்த பூக்கள்
பஞ்சு போன்ற பூக்கள்

**அ.அபினா**

**தரம் - 03**

# அம்மா



அன்புடனே என்னைத் தூக்கி வளர்த்தவர் என் அம்மா
அன்புடனே கல்வி போதித்தவர் என் அம்மா
பத்துமாதம் என்னை கருவினிலே சுமந்து எட்டி உதைத்தாலும்
தாங்கியவள் என் அம்மா.

உண்மை எனும் செல்வத்தை கூறியவள் என் அம்மா
பாரினிலே உயர்ந்திட வழிவகுப்பவள் எம் அம்மா
நான் சிறு குறும்பு செய்து தண்டித்தாலும்
என்னை அடுத்த நிமிடம் தூக்கி அரவணைப்பவள் அம்மா

கண்ணை இமை காப்பதை போல கருணையுடன்
என்னைக் காப்பவள் என் அம்மா
பாராட்டி சீராட்டி பக்குவமாய் என்னை
அன்புடன் வளர்ப்பவள் என் அன்னை



பாசம் என்னும் ஒளியில் செல்ல வைப்பவள் என்அம்மா
ஏழை எளியவர்க்கு இரங்க வேண்டும் என்பாள்.
நேர்மை என்னும் வழியில் செல்ல வைப்பாள் அம்மா
நேர்மையைக் காக்க வழிவகுப்பாள் அம்மா

அம்மா உயர்ந்த செல்வம் எனப் போற்றுவோம்
அவளையே என்றும் தெய்வமாய் மதிப்போம்
கண்ணும் கருத்து உடையவனாய் இருப்பேன்
கல்வி என்னும் சீரிய வழியில் செல்வேன்.

**ஸ்.தனுசன்**
**தரம் - 03**

# சிட்டுக்குருவி



சிட்டுக் குருவி இங்கே வா
சிறகை விரித்து பறந்து வா
நாங்கள் உணவு கொடுப்போம் வா

நாங்கள் வளர்க்கும் பறவை வா
நீர் கொடுப்போம் ஓடி வா
எங்கள் வீட்டில் ஆட வா



அழகாய் இருக்கும் பார்க்க வா
கறுப்பு நிற பட்சி வா
பழங்கள் உண்ண பறந்து வா

மெது மெதுவாக பறந்து வா
வட்டம் வட்டம் சுற்றி வா
என் கையில் ஏந்த வா

**ஜெ.தர்மிகன்**
**தரம் - 03**

## மாம்பழம்



மாம்பழம் நல்ல மாம்பழம்
மஞ்சள் நிற மாம்பழம்
இனிமையான மாம்பழம்
எனக்கு பிடித்த மாம்பழம்
குண்டு குண்டு மாம்பழம்
பெரியபெரிய மாம்பழம்
தின்ன இனிய மாம்பழம்
தங்கைக்குப் பிடித்த மாம்பழம்
சுவை மிகுந்த மாம்பழம்
எங்களுக்குப் பிடித்த மாம்பழம்



ர.ஜனுஸ்கா
தரம் - 03

## மரம்



மரமே மரமே வா வா
மரமே மரமே பூ தருவாய்
மரமே மரமே கனி தருவாய்
மரமே மரமே காய் தருவாய்
மரமே மரமே நிழல் தருவாய்
எனது மரத்தை நான் அணைத்துக் கொள்வேன்.



இ.ராகவி
தரம் - 03

## என் அம்மா



என் அம்மாவின் பெயர் ரதிபா. என் அம்மா அன்பானவர். என்மேல் மிகுந்த அக்கறை கொண்டவர். என்னை தினமும் அன்போடு கன்னத்தில் முத்தமிட்டு பாடசாலைக்கு அனுப்பி வைப்பார். நான் அம்மாவை மிகவும் மதிக்கிறேன்.



ஜெ.ஜெனிபா
தரம் - 02

## விழாக்கள்

- பத்தாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா - **தசரதவிழா**
- இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா - **வெள்ளிவிழா**
- ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா - **பொன்விழா**
- அறுபதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா - **மணிவிழா /வைரவிழா**
- எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா - **பவளவிழா**
- எண்பதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா - **அமுதவிழா**
- நூறாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா - **நூற்றாண்டுவிழா**



அ.கஸ்மினி
தரம் -05

# பழமொழிகளும் கருத்துக்களும்





1. உப்பிட்டவரை உள்ளளவும் நினை - **நன்றி மறவேல்**
2. ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு - **கோபம் சிந்தனைக்கு இடையூறு**
3. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - **ஒற்றுமை**
4. குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி மங்காது - **நற்புகழ் மங்குவதில்லை**
5. காகந்திட்டி மாடு சாகாது - **பழிக்குபயப்படாதே**
6. ஆணைக்கும் அடிசறுக்கும் - **பெரியவர்களும் தவறுசெய்யலாம்**
7. கடவுளை நம்பினார் கைவிடப்படார் - **நம்பிக்கை காக்கும்**
8. இரக்கப் போனாலும் சிறக்கப்போ - **வறுமையிற்செம்மை**
9. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம் - **உத்தநட்பு**
10. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது - **வெறும்புத்தகப் படிப்பு**

**ர.கம்சா, தரம் -05**

# தெரிந்து கொள்வோம்



1. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் - கலாநிதி. ஆனந்தசமரக்கோன்
2. இலங்கையின் பௌத்த கொடியை உருவாக்குபவர் - கேணல் ஒல்கொட்
3. தேசிய கீதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் - C.W.W.கன்னங்கரா
4. தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் - புலவர்.மு.நல்லதம்பி
5. தேசிய கீதம் முதன் முதலில் இசைக்கப்பட்டது. சுதந்திர சதுக்கத்தில் 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி புதன்கிழமை.
6. இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு 1948.02.04

**தி.தினோஜன், தரம் - 05**

# பொது அறிவு



1. பனிக்கட்டியால் மூடப்பட்ட கண்டம் எது?
   **அந்தாண்டிக்காக் கண்டம்**
2. உவர் தன்மை கூடிய கடல் எது?
   **சாாக்**
3. சர்வதேச நாணய நிதியம் எது?
   **வாசிங்டன்**
4. சூரிய ஒளி மின்சார நிலையம் எது?
   **அம்பாந்தோட்டை**
5. உலகில் மிகப்பெரிய தேவாலயம் எது?
   **செம்பிஸ்ரன் தேவாலயம்**
6. செம்பிஸ்ரன் தேவாலயம் எங்கு அமைந்துள்ளது?
   **வத்திக்கான்**
7. இராணுவமே இல்லாத நாடு எது?
   **கொஸ்தெரிக்கா**
8. எரிமலை இல்லாத கண்டம் எது?
   **ஆசியாக் கண்டம்**
9. உலகிலே மிகப்பெரிய கண்டம் எது?
   **ஆசியாக்கண்டம்**
10. உலகிலே மிகச்சிறிய கண்டம்?
    **அவுஸ்திரேலியா கண்டம்**
11. பூனை விரும்பி உண்ணும் தாவரம் எது?
    **குப்பைமேனி**
12. நாய் விரும்பி உண்ணும் தாவரம் எது?
    **பால் அறுகு**
13. இரவில் நடமாடும்பிராணி எது?
    **வௌவால், ஆந்தை**
    **ஆக்காட்டிக்குருவி**



14. சிறிய பூக்கள் எவை?
    **பனம்பூ, வேப்பம்பூ**
15. பெரிய பூக்கள் எவை?
    **தாமரை, சூரிய காந்தி**
    **சந்திரகாந்தி, செவ்வரத்தை**
16. அவுஸ்திரேலியாவின் தேசிய விலங்கு எது?
    **கங்காரு**
17. சீனநாட்டின் தேசிய விலங்கு யாது?
    **பண்டா**

**ஞா.தர்சிகன், தரம் -05**

# விண்வெளி அறிவியல்



❖ ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்துக்குப் பொறுப்பான நிறுவனம்.

**நாஸா**

❖ முதன் முதல் விண்வெளிக்குச் சென்ற மனிதன்.

**யூரஜி கஹாரின்**

❖ முதன் முதல் விண்வெளிக்குச் சென்ற பெண் வீராங்கனை..

**வலன்ரீனா ரெரஸ்கோவ்**

❖ சந்திரனில் காலடி வைத்த முதலாவது மனிதன்.

**நீல் ஆம்ஸ்ரோங்**

❖ விண்வெளியில் நடந்த முதல் வீரர்.

**அலெக்ஸ் ஏலியனோவ்**

❖ உலகின் முதலாவது விண்வெளி ஓடம்.

**கொலம்பியா**

❖ விண்வெளி விதிகளை வரையறுத்த முதல் அறிஞர்.

**சேர்.ஐசாக் நியூட்டன்**

❖ விண்வெளிக்குச் சென்ற முதல் பத்திரிகையாளர்.

**டொஹியோ ஹிரோ**

❖ 1957 இல் விண்வெளிக்குச் சென்ற முதல் உயிரினம்.

**கவக்கா எனும் நாய்**



**சி.கஜமுகன்**
**தரம் - 06**
**(பழைய மாணவன் - 2016)**

# அன்பர்களே



| | |
|---|---|
| நல்ல நாள் | - இன்று |
| நல்ல வெகுமதி | - மன்னிப்பு |
| அறியக்கூடாதது | -அடுத்தவன்செயலை |
| இருக்க வேண்டியது | - மானம் |
| இருக்கக்கூடாதது | - ஆணவம் |
| தேவைக்கேற்றது | - சாமர்த்தியம் |
| தேவையற்றது | - விவாதம் |
| எதிலும் சுலபமானது | - குற்றம் |
| மேல் தரமானது | - நட்பு |
| கீழ்த்தரமானது | - துரோகம் |
| செய்ய வேண்டியது | - உதவி |
| அறிய வேண்டியது | - உலக செயலை |
| அடங்க நினைப்பது | - தாய் தந்தைக்கு |
| அடக்க நினைப்பது | - உனது மனதை |
| நம்பக்கூடியது | - மனச்சாட்சியை |
| நம்பக் கூடாதது | - வதந்தியை |
| பார்கக் கூடியது | - பகுத்தறிவு |
| பார்க்க முடியாதது | - உன் மரணம் |
| ஆணுக்குத் தேவையானது | - உழைப்பு |
| ஆணுக்குத் தேவையற்றது | - அலங்காரம் |
| பெண்ணுக்குத் தேவையானது | - அடக்கம் |
| பெண்ணுக்குத் தேவையற்றது | - தனிமை |
| வாழத்தேவையானது | - நம்பிக்கை |
| வாழத்தேவையற்றது | - சந்தேகம் |
| கொடுக்கக் கூடியது | - அன்பு |
| தடுக்கக் கூடியது | - கோபம் |
| இழக்கக்கூடியது | - பகை |
| இழக்க முடியாதது | - காதல் |
| மனித உணர்வு | - பரிவு |
| பகுத்தறிவான உணர்வு | - இரக்கம் |
| புனிதமான உணர்வு | - அன்பு |
| இரக்கமான அன்பு | - பாசம் |

**வ.கயூரா**
**தரம் - 06 (பழைய மாணவி - 2016)**

## சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வுகள்...

### 2016





### 2017





## சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள்...

### 2016





### 2017






# இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள்

## 2016






## 2017







# கலை நிகழ்வுகள்

## 2016











## 2017









# கல்விச் சுற்றுலா

## 2016





## 2017





## கண்காட்சி நிகழ்வு









# பொங்கல் தின நிகழ்வுகள்




# மாணவர்களின் பாடரீதியான செயற்பாடுகள் - 2017








# ஆரம்பக் கல்விக் கலைத்திட்டமும் - கற்றல் உத்திகளும்



**திரு.இ.பாலமுரளி**
B.A, (N.Dip. in Teach), PGDE,
ஆசிரியர்.

நாட்டின் ஒவ்வொரு பிள்ளையும் சமுதாயத்தின் உறுப்பினர் என்ற வகையில் பூரண விருத்தி பெறுவதற்கு வாய்ப்பளிப்பது கல்வியின் நோக்கங்களில் ஒன்றாகும். பிள்ளையின் விருத்திக்கு தேவையான தேர்ச்சிகளை விருத்திசெய்ய வேண்டியது அவசிமானதொன்றாகும். முறைசார் கல்வியினை பாடசாலைகளினூடாக வழங்குவதன் மூலம் பிள்ளையின் ஆரம்பநிலை விருத்தி செய்யப்படுகின்றது.

## கலைத்திட்டம்

ஆரம்பக்கல்வியானது தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான ஐந்தாண்டு காலம் ஒழுங்கமைக்கப்பட்ட கலைத்திட்டத்தினூடாக மாணவர் கல்வியானது மூன்று முதன்மை நிலைகைளை கொண்டதாகவும் ஒவ்வொரு முதன்மை நிலைகளுக்கும் தரங்கள் வகுக்கப்பட்டுள்ளது.

**முதன்மை நிலை 1 - தரம் 1, தரம் 2**
**முதன்மை நிலை 2 - தரம் 3, தரம் 4**
**முதன்மை நிலை 3 - தரம் 5**

ஆகியவாறு பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வகுக்கப்பட்ட தரங்களில் தரம் - 1இல் மாணவர்கள் பிரவேசிக்கும் போது பிள்ளையை அறிவோம் செயற்பாடும் ஒவ்வொரு முதன்மை நிலைகளும் அடையவேண்டிய அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளையும் கொண்டதாக கலைத்திட்டம் அமைந்துள்ளது. பாடவிடயங்கள் மொழி, கணிதம், சமயம், சுற்றாடல்சார் செயற்பாடுகள் ஆகியவற்றையும் அழகியல், ஆக்கம், விஞ்ஞானம், விழுமியம், உடல்விருத்தி, சுகாதாரம் சார்ந்த தேர்ச்சிகள் சுற்றாடல்சார் செயற்பாடுகள் எனும் ஒன்றிணைந்த பாடத்தினூடாக வளர்க்கப்பட வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுதவிர தரம் - 1இல் இருந்து செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலமும் இரண்டாவது தேசிய மொழியும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. தரம்-2இல் முறைசார் ஆங்கிலமும் சேர்க்கப்பட்டுள்ளது. தரம்-2ற்கு 2017ஆம் ஆண்டு பழைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி சீராக்கம் செய்யப்பட்டு புதிய ஆசிரியர் வழிகாட்டி நூலானது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 2017இல் தரம்-1இல் கற்கும் மாணவர்களுக்கென கணித செயல்நூல் ஒன்றும் தாய்மொழிப்பாட நூலுடன் செயல்நூல் ஒன்றும் சமயபாடத்திற்கென ஒரு பாடநூலும் தயாரிக்கப்பட்டுள்ளன. வாய்மொழி ஆங்கிலமானது சுற்றாடல்சார் செயற்பாடுகள் பாடத்தில் மட்டுமன்றி கணித பாடத்திலும் பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி 2018ஆம் ஆண்டில் இருந்து தரம் - 01, தரம் - 02 ஆகிய வகுப்புகளுக்கு ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் முகமாக ஆங்கில பாடநூல்கள் அச்சிடப்பட்டு வழங்கப்படவிருக்கின்றன. முதன்மை நிலை 2 இல் இருந்து முறைசார்ந்த ஆங்கிலமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புக்களுக்கு இணைபாடவிதான செயற்பாடுகளுக்கென நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தரம் 5 வகுப்புக்கு விருப்பச் செயற்பாடுகளுக்கென வாரத்தில் ஒருநாள் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்கலைத்திட்டமானது எழுத்துவேலை, விளையாட்டும் விநோத செயற்பாடுகளும் என்ற அம்சத்தை கொண்டுள்ளது. அதாவது தரம் 1 இல் இருந்து தரம் 5 வரை விளையாட்டும் விநோதச் செயற்பாடுகள் தரம் 1 இல் அதிகமாகவும் எழுத்து வேலை தரம் 5 இல் அதிகமாகவும் அதிகரித்துச் செல்வதை உள்ளடக்கியுள்ளது. முதன்மைநிலை 1 இல் விளையாட்டுக்கள் அதிகமாகவும் முதன்மைநிலை 2, முதன்மைநிலை 3 ஆகியவற்றுக்கு குறைவடைந்து செல்கின்றது. இவையாவும் தொடர்கணிப்பீடுகளினூடாக கணிப்பிடப்படுகின்றன. மற்றும் முதன்மைநிலை 1 இன் பிள்ளைகள் தரம் - 05 தரம் - 06 இல் உள்ள பிள்ளைகளுடன் இணைந்து செயற்பாடுகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மற்றும் ஆங்கிலம், வாய்மொழி ஆங்கிலம், இரண்டாவது தேசியமொழி ஆகியவற்றுக்கும் நேரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. 2007 ஆம் ஆண்டு தொடக்கம் முதன்மை நிலை - 1 தொடக்கம் இரண்டாவது தேசியமொழியும், செயற்பாடு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் கணிதபாடத்துடனும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் உடல், உள விருத்தியில் செல்வாக்கு செலுத்துகின்ற வகையில் உடலியக்கச் செயற்பாடுகள் என்ற விடயத்திற்கு 2007இல் இருந்து பாடவேளைக்கு புறம்பாக 25 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கென "செயற்பட்டு மகிழ்வோம்" எனும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலானது அச்சிட்டு வெளியிடப்பட்டது. இது தரம் - 3, தரம் - 4, தரம் - 5 ஆகிய வகுப்புக்களுக்கான விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பிள்ளைகளின் உடற்றகைமை, விளையாட்டு ஆர்வம், உள்ளார்ந்த திறன்கள் ஆகியனவும் விருத்தியடைகின்றன. இவ்வேலைத்திட்டத்தினூடாக ஆரோக்கியமான நலமான சமநிலை ஆளுமையுடைய சுறுசுறுப்பான இளஞ்சந்ததியினரை எதிர்கால இலங்கையில் உருவாக்குவது இதன் நோக்கமாகும்.

எனவே ஆரம்பப் பாடசாலையில் பிள்ளை ஐந்து வருட காலத்திற்கு உடல்சார், அறிவாட்சிசார், சமூகம்சார், உணர்ச்சிசார் விருத்தியானது தொடர்ச்சியாக ஏற்படுவதற்கும் பிள்ளையின் அறிவை விருத்தி செய்யும் மனப்பாங்கை உருவாக்குவதற்கும் இக்கலைத்திட்டமானது துணைபுரிகின்றது. இக்காலத்தில் பிள்ளையின்சமூக இடைவினைகள் முதிர்ச்சியடைகின்றன. இந்நிலையில் ஆசிரியர், பெற்றோர், மூத்தோரின் வழிகாட்டல்கள் மூலம் பிள்ளை சூழல் செயல்களில் ஈடுபடுவதற்கும், பிள்ளைகள் அறிவாற்றலைக் கட்டி எழுப்புவதற்கும் துணைபுரிகின்றது. இதன்மூலம் பிள்ளைகள் மிகச் சிறந்த முறையில் கற்றுக்கொள்கின்றார்கள்.

**கற்றல் உத்திகள்**

ஆரம்ப பாடசாலைப் பிள்ளையின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது ஆசிரியரின் உத்திகளும் (தந்திரோபாயங்கள்) பிள்ளையில் கற்றல் இடம்பெறுவதற்கு அவசியமானதொன்றாகும். "பிள்ளைகளின் கற்றலானது சூழல்சார் செயல்வழிகளில் நிகழுகின்ற அறிவின் கட்டுமானம் மூலம் தொழிற்படுகின்றது" என்பது பிஜாஜேயின் கூற்றாகும். ஒரு பிள்ளை அதிகரித்துச் செல்லுகின்ற சிக்கலான அறிவு விளக்கத்தை "கட்டியெழுப்புதல்" மூலம் காலப்போக்கில் அடைகின்றது.

கற்றல் திறம்பட நிகழ்வதற்குபிள்ளை தொடர்பாக பின்பற்றும் தந்திரோபாயங்கள் முக்கியமானதொன்றாகும். இக்கற்பித்தல் உத்திகள் மூலம் பிள்ளையின் அறிவுசார் திறன்கள், மனப்பாங்குகளை கட்டியெழுப்ப முடியும். பல்வேறு கற்பித்தல் பொருட்கள், மாதிரிகள், ஊடகங்கள், கற்பித்தல் முறைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி முழுமையான கற்றலுக்காக திட்டமிட்டு செயற்படுத்திக் கொள்ளலாம். ஆரம்பக் கல்விக்கு பொருத்தமான பிரதான முறையியல்கள் மூலம் மாணவர் மையக்கல்விக்கு வழிவகுக்க முடியும். இம்முறையியல்களை வெற்றிகரமானதாக செயற்படுத்திக் கொள்வதற்கு பொருத்தமான கற்றல் உத்திகள் பலவற்றை வகுப்பறைச் செயற்பாடுகளின்போது செயற்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கொள்ளலாம்.

1. போலச்செய்தல்
2. வினாவுதல்
3. அவதானித்தல்
4. தேடல்முறை
5. குழுமுறை
6. இசை, பாடல்களினூடாக கற்றல்
7. சிந்தனைக்கிளறல்
8. புதுமை காண் தேடல்
9. கண்டுபிடித்தல்
10. பிரச்சினை தீர்த்தல்
11. கருத்துச் சித்திரமுறை
12. நடித்தல் (வகிபாகம் ஏற்றல் / நாடகமுறை)
13. செய்து காட்டுதல் / காட்சிப்படுத்துதல்
14. செவிமடுத்தல்
15. வாசித்தல்
16. எழுத்து

மேற்கூறிய தந்திரோபாயங்களில் ஒன்றையோ பலவற்றையோ செயற்படுத்தி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் பிள்ளையின் அறிவை விருத்திசெய்து கொள்ள முடியும். எண்ணக்கருக்களில் முதன்மைத் தேர்ச்சியும், மனப்பாங்குகளை உருவாக்கவும், செயற்றிறன்களை விருத்தி செய்யவும் முடியும். "அதிக நிபுணத்துவமுள்ள பங்காளிகளான முதிர்ந்தோர் அல்லது மூத்தபிள்ளைகள் வழங்கும் அறிவுறுத்தல்கள் பிள்ளைகளின் கற்றல் விருத்திக்கு வழிகாட்டுகின்றன." என்பது விகொட்ஸ்கியின் கருத்தாகும். இதன்மூலம் பிள்ளைகள் சுறுசுறுப்பான கற்றலில் ஈடுபடுகின்றார்கள்.

வகுப்பறைச் செயற்பாடுகளின் போது புதிய நுட்பங்களை கடைப்பிடித்து கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவது இன்றியமையாததாகின்றது. ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் செயல்முறை ரீதியில் நவீன உத்திகளை கடைப்பிடித்து கற்பித்தலில் ஈடுபடுபவர்களாயின் சிறந்த கற்றல் விருத்தியினை அடையமுடியும். மேலும் இவ்வுயர்விற்கு ஊக்கப்படுத்தல் மூலம் மாணவர்களின் கற்றல் உயர்வு பெற துணைபுரியலாம்.

கற்றல் சூழல் ஆரம்பக்கல்வியில் கட்டாயம் அவதானிக்க வேண்டியதொன்றாகும். பல்வேறுபட்ட சூழல்களில் இருந்து கற்றலில் ஈடுபடுவதற்கு வரும் பிள்ளைகள் குழப்பத்துடன் பாடசாலை வருகின்றார்கள். அவர்களது சூழலை அறிந்து ஆசிரியர் உதவ வேண்டும். தேர்ச்சிகளை அடைவதற்காக குறிக்கோள்களை அமைத்து வாழக் கற்றுக்கொடுக்க வேண்டும். மாணவர்களின் நம்பிக்கை எதிர்பார்ப்பு ஆகியவற்றைப் புரிய வைத்து மாற்றத்தை ஏற்படுத்துபவராக ஆசிரியர் தொழிற்பட வேண்டும். கற்பதற்கு ஏற்றசூழலை ஒழுங்கமைத்து செயல்ரீதியாக கற்றல் இடம்பெறுவதற்கு ஊக்கம் அளிப்பதும் ஆசிரியரின் முக்கிய பணியாகும். இதுமட்டுமன்றி கற்றல் சூழலில் தூண்டல் செயற்பாட்டினூடாக மாணவர்கள் சுயமாக கற்பதற்கு வாய்ப்பு வழங்குவதும் இன்றியமையாததாகின்றது. வளமான கற்றலுக்கு ஏற்ற அனுபவங்களை வழங்கும் கற்றல் சூழலை அமைத்துக் கொடுப்பதன் ஊடாக மாணவர்கள் கற்றலில் சுறுசுறுப்புள்ளவர்களாக ஈடுபட்டு அறிவினை விருத்தி செய்யவும், எண்ணக்கருக்களில் தேர்ச்சி பெறவும், மனப்பாங்குகளை உருவாக்கவும், செயற்றிறன்களை விருத்தி செய்யவும் வழிகோலுகின்றது.

எனவே ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள் கற்றல்சூழல் என்பவற்றுக்கு ஏற்ப மகிழ்ச்சிகரமான முறையில் பொருத்தமான உத்திகளைப் பயன்படுத்தி ஆசிரியர் கற்பித்தலில் ஈடுபடும்போது மாணவர்களின் கற்றல் செயன்முறையானது இலகுவாக நடைபெற உதவுகின்றது. ஆரம்பக்கல்வி கலைத்திட்ட போக்குகளை கற்று திட்டமிட்டு ஒழுங்கமைத்து செயற்படுத்துவது ஒவ்வொரு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களதும் பொறுப்பாகும். கலைத்திட்ட விருத்தியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், ஏனைய மூத்தோர் ஆகியவர்கள் ஆரம்பப் பாடசாலை பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டுக்கு பொருத்தமான சந்தர்ப்பங்களை அறிந்து உதவுவதன் மூலம் பிள்ளைகள் கற்றல் விருத்தி பெறுவார்கள் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

---

# பிள்ளைகளுக்கு ஆக்கச் செயற்பாடும் விளையாட்டுக்களும் ஏன் முக்கியமானவை?



**திருமதி.கமலவேணி கிருஷ்ணதாசன்**
**Commerce Trd.**

- அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு வேண்டிய வாய்ப்புக்களை வழங்குவதற்கு இது ஒரு கருவியாக அமையலாம்.
- சேர்ந்து வேலை செய்யும் பொழுது அல்லது விளையாடும் பொழுது சமூக ஒன்றிணைவு, நல்லுறவு ஏற்படுகின்றது.
- என்னால் இதனைச் செய்யமுடியும் என்ற நம்பிக்கை ஆற்றலை ஏற்படுத்துகிறது.
- பிள்ளைகளின் உள்ளார்ந்த திறமைகள் வெளிக்கொணரப்பட்டு அவை மென்மேலும் வளர்க்கப்படுவதற்கு உதவுகின்றது.
- மன ஒருமைப்பாடும் செயற்பாட்டில் தன்னை முழுமையாக ஈடுபடுத்துவதால் ஏற்படுகின்றது.
- பரீட்சைப் பெறுபேறுகளால் கவலையுறும் மாணவர்கள் விளையாட்டினால் ஏற்படும் களைப்பும், மகிழ்ச்சியான உணர்வும் சேர்வதனால் அமைதியையும் சமாதனத்தையும் உணர்ந்து கொள்ளுவர்.

# தமிழ்மொழித்திறன் வளர்ப்பு வழிவகைகள்



**திருமதி.வலன்ரீனா இளங்கோவன்,**
B.A (Hons), PGDE, M.A(Dist), M.Phil(Read),
ஆசிரியர்

"மொழியே ஒரு நாட்டின் விழி" எனவே விழியாக விளங்கும் மொழியைப் பிழையறக் கற்றுத் தெளிதல் அவசியமாகும். மொழியைக் கற்கின்ற போக்கில் முதலில் அடிப்படைத் திறன்களைப் பெறுவதைக் குறிப்பிடலாம். ஏனெனில் மொழியைக் கற்றறிந்த பின்னர் தான் அதிலுள்ள இலக்கியங்களைக் கற்றுத் தெளிவடையலாம். மொழியின் ஆளுமைகளுக்கு மாணவர்களிடையே அடிப்படைத் திறன்களை வளர்த்திடல் வேண்டும்.

❖ **அடிப்படைத் திறன்கள்**

அடிப்படைத் திறன்களைக் கேட்டல், பேசுதல், எழுதுதல், வாசித்தல் என்னும் நான்கு நிலைகளாக வகுக்கலாம். இவற்றில் கேட்டல், வாசித்தல் இரண்டும் உட்கொள் திறன்களாகவும், பேசுதலும் எழுதுதலும் வெளியிடும் திறன்களாகவும் பிரிக்கப்படுகின்றன. ஆரம்பக் கல்வியை முடித்துச் செல்லும் போது இந்நான்கு திறன்களிலும் தேர்ச்சி பெற்று விளங்குதல் வேண்டும்.

**கேட்டல் :-**

**"செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்**
**அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை"**

என செவி அறிவின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றார் திருவள்ளுவர். அதற்கேற்ப கற்றலின் வாயில்களாக ஐம்பொறிகள் கூறப்பட்டாலும் செவியே கேட்டல் திறனை வளர்க்கும் முதன்மையான வாயிலாகும். கற்றலின் எண்பது வீதப்பகுதி கேட்டல் மூலமே நிகழ்கின்றது. கேட்டல் திறனானது பேச்சுத் திறனுக்கு இன்றியமையாதது ஆகும்.

**கேட்டல் திறனை வளர்க்கும் வழிமுறைகள்**

மொழி அதனைப் பேசுகின்ற அனைவராலும் ஒரே மாதிரியாகப் பேசப்படுவதில்லை. மாவட்டத்திற்கு மாவட்டம் பேசும் போக்கில் மாறுதல் காணப்படுகின்றது. இம்மாறுதலானது குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட கேட்டல் சூழலாலேயே ஏற்படுகின்றது. எனவே கேட்டல் திறனின் தன்மையைக் கொண்டே மொழியின் வழக்கு அமைகின்றது.

கேட்டல் திறனை வளர்ப்பதற்கு பாடத்திட்டத்தில் பல்வேறு உத்திகள் பயன்படுத்தப் படுகின்றன. பாடல்கள், கதைகள், கிரகித்தல் செயற்பாடுகள், உரையாடல்கள், கட்டளைகள், வருணனைகள், செய்திகள், புதிர்கள், விடுகதைகள், வசனங்கள், நாடகங்கள் போன்ற இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தி கேட்டல் திறனை வளர்க்கலாம்.

**விளையாட்டு**

ஆசிரியர் மாணவர்கள் ஒவ்வொருக்கும் ஒவ்வொரு பறவைகள், விலங்குகள்அல்லது மரங்களின் பெயர்களைச் சூட்ட வேண்டும். ஒவ்வொன்றையும் பற்றிக் கூறும்போதும் அந்தந்தப் பெயருக்குரிய மாணவன் எழுந்து நிற்க வேண்டும். இவ்விளையாட்டின் மூலம் கேட்டல் திறன் வளர்க்கப்படுகின்றது.

**ஒலியறிதல் விளையாட்டு**

பந்தினைத் தரையில் தட்டுதல், கைகளைத் தட்டுதல், மணியை ஒலிக்கச் செய்தல், திறப்புக் கோர்வையை ஆட்டுதல் போன்ற செயல்கள் மூலம் ஒலி எழுப்பி மாணவர்களை ஒலிகளை இனம்காணச் செய்யலாம். மேலும் கதை சொல்லுதல், பாடல்களைப் பாடிக்காட்டி பாடச் சொல்லுதல், நடிக்கச் சொல்லுதல் ஆகியன தொடக்க நிலையில் கேட்டலின் ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளாகும்.

**விடுகதைகள்**

கேட்டல் திறனை வளர்க்கப் பயன்படுத்தப்படும் விடுகதைகள் பிள்ளைகளுக்கு அறிமுகமில்லாத வகையில் படித்துக்காட்டி அதிலுள்ள முக்கிய கருத்துக்களைக் கேட்டறியலாம். கவிதையைப் படித்துக்காட்டி பொருத்தமான தலைப்பைக் கூறச்செய்யலாம்.

அத்தோடு ஒரு செய்தியை ஆசிரியர் வாசித்துக் காட்டி அதிலுள்ள முக்கிய கருத்துக்களை கேட்டறியலாம். கதையை வாசித்துக்காட்டி பொருத்தமான தலைப்பைக் கூறச்செய்யலாம்.

**பேச்சுத்திறன் :-**

கேட்டல் திறனைப் போன்றே அடிப்படைத் திறன்களுள் பேசுதல் திறனும் ஒன்றாகும். பேசுதல் மொழியைக் கையாளுகின்ற திறன்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. தேவையான சொல்லறிவினைப் பிள்ளைகள் பெறவில்லையெனில் பேசுதலில் தயக்கம் ஏற்படும். எனவே, சொற்களஞ்சியப் பெருக்கம் அமையக்கூடிய வகையில் செயற்பாடுகள் அமைத்தல் வேண்டும்.

**பேச்சுத்திறன் வளர்க்கும் செயற்பாடுகள் :-**

**1. ஒலிப்பயிற்சி**

பேசுதல் என்பது ஒலிப்பு உறுப்புக்களைச் சார்ந்த செயற்பாடு ஆகும். நா, பல், இதழ், அன்னம் ஆகியவை ஒலிப்பு உறுப்புக்களாகும். ஒத்த ஒலியுடையசொற்கள் அடுத்தடுத்த தொடர்களில் அமைந்து விரைவாகவும், பிழையின்றியும் ஒலிக்கப் பயிற்சி அளிக்கலாம்.

**2. நாநெகிழ் பயிற்சி**

ஒரே ஒலியைத் தொடர்ந்து கூறச் செய்வது நா நெகிழ் பயிற்சியாகும்.

**ல ல ல ல ல ல ல ல ல ல ல ல ல லா**

**ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழா**

**ள ள ள ள ள ள ள ள ள ள ள ள ள ள ள ளா**

இவ்வாறு ஒத்த வகையான ஒலிகள் கொண்ட எழுத்துக்கள் அல்லது சொற்களைப் பல முறைகள் கூறச்செய்து இப்பயிற்சியை அளிக்கலாம்.

**3. நாபிறழ் பயிற்சி**

ஒத்த ஒலியுடைய சொற்களை அடுத்தடுத்து வருமாறு தொடர்களில் அமைத்து விரைவாகவும், பிழையின்றியும் படிக்கப் பயிற்சி அளித்தல்.

எடுத்துக்காட்டாக :-

**"ஓடும் நரியில் ஒரு நரி கிழ நரி"**

**"ஏழைக் கிழவன் வாழைப்பழத்தில் வழுக்கி விழுந்தான்"**

**"கள்ளன் குள்ளனைப் பள்ளத்தில் தள்ளினான்"**

தொடக்க நிலையில் குறைசொல் ஒலிப்பு, பிறழ்ந்த ஒலிப்பு, பேச்சு வழக்குச் சொல்லாட்சி எனும் குறைகளை இப்பயிற்சிகள் மூலம் களையலாம். இவற்றைத் தவிர பேசுவதில் தயக்கம், அச்சம், கூச்சம் போன்ற உளவியல் சார்ந்த குறைபாடுகளும் காணப்படுகின்றன. இவற்றைக் கண்டறிந்து அதனைச் செயற்பாடுகளிலும் குழந்தைகளின் பங்கேற்பு மிகுதியாக அமையும் வகையில் செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

**வாசித்தல்**

வாசித்தலின்போது ஒலிக்குறியீடுகள் எழுப்பப்படுகின்றன. கேட்டலின் போது ஒருவர் புறத்தில் இருந்து பேசுகின்றார். வாசிப்பின்போது வாசிப்பவர் மனத்துக்குள் இருந்து ஒருவர் பேசுவதைப் போன்ற நிலையைக் காணலாம். சரளமாக வாசிப்பவர் வேகம் நிமிடத்திற்கு 250 முதல் 300 சொற்களாகும்.

வாசித்தலை ஆழ்ந்த வாசிப்பு, அகன்ற வாசிப்பு எனவும் வாய்விட்டு வாசித்தல், வாய்க்குள் வாசித்தல் எனவும் வகைப்படுத்தலாம். குழந்தைகள் வாய்விட்டு வாசித்தல் மூலமே ஒலிப்பு முறைகளைச் செம்மைப்படுத்த இயலும்.

மாணவர்களைப் பாடங்களையும் செய்யுள் பகுதிகளையும் வாய்விட்டு வாசிக்கச் செய்தால் வாசிப்புத்திறன் வளரும். வாசித்தல் வளர்நிலையில் வாய்விட்டுவாசித்தல் பயனுள்ளதாக அமையும். வாய்க்குள் வாசித்தல் திறன் வளர்க்க கதைநூல்களை வழங்க வேண்டும். தொடக்க நிலையில் வாய்விட்டு வாசிக்கும் திறனைக்கொண்ட குழந்தையை வாய்க்குள் வாசிக்க

பயிற்சி அளிக்க வேண்டும். வாய்க்குள் வாசிக்க பயிற்சி அளித்தபின் பாடநூல்களோடு மலர்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், கதைப்புத்தகங்கள் ஆகியவற்றை வழங்கி வாசிக்கச் செய்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் மொழிநடையை நன்கு புரிந்து மொழியமைப்பினையும் செய்தித் தொடர்பினையும் மாணவர்கள் அறிந்து கொள்வார். அத்தோடு வாசித்தல் திறன் மேம்பாடு அடையும்.

**எழுதுதல்**

மொழி தோன்றி வளர்ந்து பல்லாண்டுகளுக்குப் பின்னரே எழுத்து வாயிலாக எண்ணத்தை வெளிப்படுத்தும் உத்தியை மனிதன் கண்டறிந்தான். மொழியின் வழிக்கருத்துக்களை வெளியிடுவதற்கு உதவுவதே எழுதுதல் திறனாகும்.

ஆங்கில எழுத்துக்களைப் போல் தமிழ் எழுத்துக்கள் எழுதப்படுவதில்லை. தமிழில் ஒவ்வொரு எழுத்தும் தனித்தனியே எழுதப்பட வேண்டும். சொல்லிலுள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றும் உரிய இடைவெளியில் எழுதப்பட வேண்டும். சொற்களுக்கு இடையிலேயும் உரிய இடைவெளி அமைதல் வேண்டும். வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளி அமைதல் அவசியமானதாகும். தமிழ் எழுத்துக்கள் கோடுகளில் அமையும் இடத்தைக்கொண்டு அவற்றை நடுப்பகுதி எழுத்துக்கள் (44). நடுக்கீழ்ப்பகுதி எழுத்துக்கள் (58), நடுமேல்பகுதி எழுத்துக்கள் (94), நடுமேல் பகுதி எழுத்துக்கள் (51) என வடிவ வகைப்படுத்தப்படுகின்றன.

**எழுதுதல் திறன் வளர்க்கும் செயற்பாடுகள்**

மாணவர் எழுத்துக்களைச் சரியான வடிவத்தில் எழுதக் கற்றுக்கொண்டு பின்னர் தொடர்ந்து சொற்களையும், சொற்றொடர்களையும் எழுதப் பயிற்சியளித்தல் வேண்டும். இதற்கு வரியொற்றி எழுதுதல், பார்த்து எழுதுதல் போன்ற பயிற்சிகளை அளிக்கலாம்.

**வரியொற்றி எழுதல்**

கையெழுத்து சிறப்பாக அமைவதற்கு வரியொற்றி அழிக்கப் பயிற்சியளிக்கலாம். முதலில் நான்கு வரிகளில் எழுதிப்பழக்கச் செய்த பின் இரண்டு வரிகளில் எழுதச்செய்யலாம். பின் ஒரு வரியில் எழுதப் பயிற்சியளிக்கலாம்.

**பார்த்து எழுதுதல்**

பாடப்புத்தகத்திலுள்ள பகுதிகளைப் பார்த்து நாள்தோறும் குறிப்பேட்டில் எழுதிவரச் செய்தலே பார்த்து எழுதுதல் ஆகும். பார்த்து எழுதுதல் மூலம் வேகமாய் எழுதவும் நிறுத்தற் குறியீடுகளைப் பயன்படுத்தவும் சொல்லிக்கொண்டே எழுதவும் சிறந்தபயிற்சி கிடைக்கின்றது.

**சொல்வதெழுதுதல்**

வகுப்பில் ஆசிரியர் கூறும் சொற்களையும் தொடர்களையும் கேட்டு எழுதச் செய்வதால் எழுதுல்திறன் மேம்படும். பாடப்பகுதிகளில் உள்ள சொற்களையும் தொடர்களையும் தவிர சொல்லாட்சியை வளர்க்கும் சொற்களையும் வழங்கலாம். இதன் மூலம் சொல்வதைக் கேட்கும் திறனும் நினைவாற்றல் திறனும் பிழையின்றி எழுதும் திறனும் வளரும்.

**சுயமாக எழுதுதல்**

சொல்வது எழுதுதலுக்கு மேம்பட்ட திறன் இதுவாகும். தாமே எழுதும் போது மாணவர்களே ஒலியை எழுப்பி அவ்வொலிக்குரிய எழுத்து வடிவங்களை அறிந்து எழுதும் பயிற்சி பெறுகின்றனர். பாடங்களைப் பார்த்து பொருள்களைப் பட்டியலிடுதல், நிகழ்ச்சிகளை பட்டியலிடுதல் எனும் பயிற்சிகளை அளிக்கலாம்.

**புதியன படைத்து எழுதுதல்**

மொழிப்பயிற்சி, கட்டுரைப்பயிற்சி போன்றவற்றை மாணவர்களே எழுதப் பயிற்சியளிக்கலாம். சிறுகட்டுரைகள், சிறுகதைகள், சிறுநாடகங்கள், சிறுகவிதைகள் போன்ற படைப்புக்களை எழுதச்செய்து ஊக்கப்படுத்தினால் மாணவர்களின் எழுத்தாற்றல் மேம்படும்.

**முடிவுரை**

மாணவர்களிடம் பாடப் பொருளறிவோடு மொழித்திறனை வளர்ப்பது சிறந்ததாகும். எனவே மொழித்திறனை வளர்த்திடும் வகையில் உரிய பயிற்சிகளை அளித்தால் மாணவர்களின் மொழியறிவு மேம்படும். படைப்பாற்றல் திறன் வளரும் மொழியே இலச்சியச்சுவையுரை உதவும் கருவியாக உள்ளது. எனவே அம் மொழியில் திறன்களை வளர்த்திட வேண்டியது மிகமிகத் தேவையாகின்றது.

# மாணவர்களின் எழுதுதல் திறன் விருத்தியில் ஆரம்ப பாடசாலையின் பங்களிப்பு



**திரு.இ.வாகீசன்**
N.Dip.in.Teach.(Primary)
ஆசிரியர்

மாணவர்களின் எழுதுதல் திறன் எழுத்துத் திறனிலிருந்து வேறுபட்டதாகும். மொழியைக் கற்கும் போது அதிலுள்ள எழுத்துக்களையும் சொற்களையும் வாக்கியங்களையும் முறையாக எழுதும் அளவிலேயே எழுதுதல் திறன் நிறைவடைகின்றது. மொழியின் வழி கருத்துக்களை வல்லமையாக வெளியிடும் திறனே எழுத்துத் திறனாகும். இது மொழியின் உயர்நிலை திறனாக அமைகின்றது. இத் திறன் பெற எழுதுதல் திறனோடு சிந்தனைத் திறனும் இணைய வேண்டும். கடிதம், கட்டுரை, படைப்பு போன்றன எழுத்துத் திறன் சார்ந்தனவாகும். எழுதுதல் திறன் என்பது எழுத்துக்களை எழுதுவதற்குரிய முன்செயல்கள் எழுதும் முறை, எழுதும் நிலை ஆகியவற்றினோடு தொடர்புடையதாகும். செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல் ஆகிய திறன்களைப் பெறுவதற்கு பாடசாலைகள் தவிர்ந்த பிற சூழல்கள் உதவுகின்றன. ஆனால் எழுதுதல் திறன் வளர்ச்சிக்கு பாடசாலையும் ஆசிரியர்களும் பெற்றோர்களுமே பொறுப்பாவார்கள். எனவே ஆரம்பக்கல்விப் புலத்தில் எழுத்தத் திறனை வளர்ப்பது மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

எழுத்தப் பற்றிய புலக்காட்சி மற்றும் எழுத்தணர்வு உந்தல் ஆகியவை ஆரம்பநிலை வகுப்புக்களிலே மகிழ்ச்சியுடனும் உள்ளணர்வுடனும் வளர்க்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. எளிமையான பயிற்சியில் இருந்து சில சிக்கலடையும் பயிற்சிகளிற்கு மாணவர்களை மகிழ்ச்சியுடன் நகர்த்தி செல்வதற்குரிய திட்டமிடல் முக்கியமானதாக அமைகின்றது. ஆரம்பத்தில் ஒரு குழந்தைக்கு எழுதுதல் பயிற்சியினை வழங்குவதற்கு முன்னர் தசைநார்பயிற்சி வழங்குதல் முக்கியமானதாகும். கிளேயை வழங்கி அவற்றை கைகளால் பிசைந்து உருவங்கள் சிலவற்றை விரும்பியவாறு ஆக்கல், படங்களை கோட்டின் வழியே வெட்டி வேறாக்க சந்தர்ப்பம் வழங்குதல், கடதாசிகளை கிழித்து கைகளால் உருட்டுவதற்கு வழிப்படுத்தல், சரியான கொண்ணிலையில் அமர்ந்திருந்து எழுதுகருவியை பிடிப்பதற்கு பழக்குதல், கிடைக் கோட்டை வரைதல் அதை தொடர்ந்து வட்டம் சுழித்தல் தொடர்ச்சியாக வட்டம் சுழித்தல் என்றவாறு பயிற்சிகளைத் தொடர்ந்து எழுதக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

எழுத்துக்களை எழுதும் போது அவற்றை கோட்டின் மேல் அல்லது கோடுகளுக்கு இடையில் எழுத வேண்டும் என்ற உணர்வை குழந்தைக்கு சிறுவயதிலேயே ஊட்டுவது அவசியம். கோட்டின் மேல் அல்லது கீழ் அமைய வேண்டிய பகுதி பற்றிய அறிவையும் எழுத ஆரம்பிக்கும் போது குழந்தைக்கு மிக அவதானமாக வழங்க வேண்டியது அவசியமாகும்.

எழுதுவது தொடர்பாக "எழுதும் ஆய்வு பற்றிய தேசிய ஆய்வு அறிக்கை" யில் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. எம். ஜீ. டி. நவரத்ன அவர்கள் 1998 தந்த விளக்கம் பயன் மிக்கதாக உள்ளதால் அது இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**எழுத்தப் பயிற்சி பெறும் குழந்தை கடைப்பிடிக்க வேண்டியவை.**

1. எழுத்துக்களின் வடிவத்தை பொதுவாக அறிந்து கொள்ளல்.
2. எழுத்துப் பொறிமுறையை நுட்பமாக அறிந்து கொள்ளல்.
3. மெய் எழுத்துக்களுடன் வரும் உயிர்க்குறிகளை அறிந்து கொள்ளல்.
4. உயிர் மெய் எழுத்துக்களிலுள்ள உயிர்க்குறிகளின் அளவுப்பிரமானத்தை அறிந்து கொள்ளல்.
5. எழுத்துக்களை ஆரம்பிக்கும் இடம் முடிவடையும் இடம் என்பனவற்றை அறிந்து கொள்ளல்.
6. உறுப்பமைவாக எழுதுதல்.
7. எழுத்துக்களின் அளவிலுள்ள சமநிலையை அறிந்து கொள்ளல்.
8. ஓர் எழுத்திலிருந்து மற்றைய எழுத்து வேறுபடும் வகையில் எழுத்தக்களை எழுதுதல்.
9. ஓர் எழுத்தை எழுதும் போது பேனாவைத் தாளில் இருந்து எடுக்க வேண்டிய இடம் எது என்பதை தெரிந்து கொள்ளல்.
10. எழுத்துக்களை எழுதும் போது உயிர்க்குறி உள்ளவை எவை இல்லாதவை எவை என்பதை தெரிந்து கொள்ளல்.
11. எழுத்துக்களை இடப்பக்கத்தில் இருந்து வலப்பக்கத்திற்கு ஒன்றன் பின் ஒன்றாக எழுதுதல்.

12. எழுத்துக்களிடையே சம இடைவெளியிருத்தல்.

13. சொல்லை எழுதும் போது எழுத்துக்களிடையிலான இடைவெளியைக் கவனத்தில் கொள்ளல்.

14. ஒரு சொல்லை எழுதும் போது அதன் முதல் எழுத்தை எழுதிய பின் ஏனைய எழுத்துக்களை சமனான வேகத்தில் எழுதுதல்.

15. சொற்களை எழுதும்போது எழுத்துக்களை தனித்தனியே எழுதுல், சொற்களுக்கிடையே சில இடைவெளி இருத்தல்.

16. எழுத்துக்களினை ஒரே சீராகவும் அச்சுறுப்பாகவும் எழுதுதல்.

மேலும் கலாநிதி.எல்.இராமமூர்த்தி எழுதிய தமிழ் எழுத்துக்கள் ஒரு மதிப்பீடு என்னும் கட்டுரையில் எழுத்துக்களை எழுதும்முறை பற்றிக் குறிப்பிடுவதுடன் எழுதுதல் திறனை வளர்ப்பதற்கு எழுத்துக்களை அறிமுகப்படுத்தும் முறை மிகவும் முக்கியமானதாகும் என்று கூறுகின்றார். எழுத்துக்களை அறிமுகம் செய்யும் போது முதலில் மெய் எழுத்துக்களையும் பின்னர் உயிர் எழுத்துக்களையும் எளிமையான வடிவத்திலிருந்து கடினம் வரை அறிமுகப்படுத்தலாம். மெய் எழுத்துக்களின் பின் உயிர் எழுத்துக்களை அறிமுகப்படுத்தும்போது பிள்ளை இலகுவில் எழுதும் திறனைப் பெறும் என்கின்றார். தமிழ் எழுத்துக்கள் எழுதும் முறையை பின்வருமாறு விபரித்துள்ளார்.

1. இடப்பக்கம் தொடங்கி வலப்பக்கமாக செல்லும் எழுத்துக்கள்.
   **ட, ப, ம, ய, ழ**

2. இடப்பக்கம் தொடங்கி இடதுபக்கம் செல்லும் எழுத்துக்கள்.
   I. இடது பக்கம் கீழ்ப்பகுதியில் தொடங்கும் எழுத்துக்கள்.
   **ர, ர, ந, ங, ற**
   II. இடது பக்க மேல்ப்பகுதியில் தொடங்கும் எழுத்துக்கள்.
   **ளு, ன, ண, வ, ல, எ, ஏ, ஞ**
   III. மேல்ப்பகுதியின் நடுவில் தொடங்கும் எழுத்துக்கள்.
   அ, ஆ, இ


அந்த வகையிலே ஒவ்வொரு தரத்திலும் மாணவர்களது எழுத்துத்திறன் விருத்தியில் செல்வாக்குச் செலுத்துவனவாக மாணவரது உடல்நிலை, உளநிலை, மாணவர்களுடன் பழகும் நபர்கள், தனிப்பட்ட முயற்சிகள், ஏனைய ஊக்கல் நடவடிக்கைகள், குடும்ப பொருளாதார பின்னணி, முன்பள்ளி கற்பிக்கும் செயற்பாடுகள், சமூகச் சூழல் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள், சகபாடிக் குழுக்கள் என்பன அமைகின்றன. மேற்குறிப்பிட்டவற்றின் காரணமாகவே மீத்திறன்மாணவன், சாதாரண மாணவன்,பின்தங்கிய மாணவன் என்ற நிலைகளுக்கு உள்ளாகின்றான்.

பொருளாதாரம் ஒரு மாணவனுக்குச் சாதகமாக அமையும்போது அவனுக்கு கற்றலுக்கு தேவையான வளம் அனைத்தும் கிடைக்கின்றது. அவன் முன்னேறிச் செல்ல வாய்ப்புண்டு. எழுத்துக்களை தெளிவாக, விளக்கமாக, இலகுவாக, மாணவர்களுக்குப் பழக்கி வளர்த்துச் செல்வதில் பெரும்பங்கு ஆரம்ப பாடசாலைக்குரியது. அந்தந்த தருணத்திற்குரிய எழுத்துக்களை அதாவது வளர்ச்சிப் படிமுறைகளைஅதே தரத்தில் ஏற்படுத்தினால் எழுதுத்திறன் நன்கு விருத்தியடையும்.

ஒவ்வொரு மாணவனுக்கும் எழுத்துத்திறன் விருத்தியில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனினும் முறைசார்ந்த பாடசாலை மிகவும் அவசியமானதாகும். எழுத்துப்பயிற்சிகளை திட்டமிட்டு தரம் 1இலிருந்து வழங்குவதன் மூலம் எழுத்துத் தொடர்பான அனேகமான பிரச்சினைகளை தீர்க்க முடியும். அதிலும் தவறும் மாணவரை அவதானித்து அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் பயிற்சி வழங்குவதன் ஊடாக நல்ல எழுதுதல் திறனுடைய ஒரு சமுதாயத்தை பாடசாலை மூலம் உருவாக்கலாம் என்பது திண்ணம்.

---

சி.சம்திகா
தரம் -01



ஞா.கஜானா
தரம் -01



# வாசிப்பின் அவசியம்



**ராஜினி சதீஸ்குமார்**
ஆசிரியர்

இன்றைய நவீன யுகத்திலே சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை வாசிப்புப் பழக்கமானது அருகிக் கொண்டே வருகின்றது. இதற்கு காரணங்கள் பல உள்ளன. வாசிப்பு என்பது மாணவர்களுக்கு மிகவும் இன்றியமையாததொன்றாகும். ஆனால் இன்றைய மாணவர்கள் மத்தியிலே இவ்வாசிப்புப் பழக்கமானது முற்றாக இல்லை என்றே கூறலாம்.

பாடசாலையில் தினமும் பலவிதமான பாடங்களைப் படிக்கின்றோம். அவை அந்தந்தப் பாடங்கள் சம்பந்தப்பட்டவையாகும். பள்ளிப்பாடங்கள் மட்டும் நம் அறிவை வளர்க்காது. பாடங்கள் தொடர்பான மேலும் பல தகவல்களைப் பெற நாம் வேறு பல நூல்களை வாசிக்க வேண்டியது அவசியமாகிறது.

வாசிப்பதன் மூலமே நாம் ஒரு மொழியில் சிறந்த புலமையைப் பெற முடியும். ஒரு மொழியில் உள்ள பல புதிய சொற்களை அறிய அம்மொழி நூல்களை வாசிக்க வேண்டும். அத்துடன் அவற்றின் பொருளை உணர்ந்து சரியான முறையில் பயன்படுத்தவும் வாசிப்பு அவசியமாகின்றது. மொழி வளத்தைப் பெருக்கும் அதேவேளையில், பொது அறிவையும் வாசிப்பதன் மூலமே வளர்த்துக் கொள்ளலாம்.

இந்த நவீன உலகில் மனிதன் இயந்திரமாக வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வியந்திர வாழ்க்கையிலிருந்து மீண்டும் மனமகிழ்வு பெறவும் வாசிக்கும் பழக்கம் உதவுகின்றது. கதை, கட்டுரை, கவிதை, செய்யுள் போன்றவற்றை வாசிப்பதன் மூலம் அவற்றின் சுவையை உணர்ந்து வாசிப்பதனால் மனம் மகிழ்கின்றது.

எனவே, வாசிப்பு நமக்கு எவ்வளவு அவசியமாகின்றது என்பதை அறியமுடிகின்றது. 'நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு' என்பதற்கேற்ப பலநூல்களை வாசித்து நம் அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டியது நமது தேவையாக உள்ளது.

வருடந்தோறும் வாசிப்பின் மேன்மையை, அதன் பயனை அனைவரும் நுகர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஒக்டோபர் மாதமானது வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலைகளில் மாணவர்கள் தம்பால் இயன்ற ஓர் கட்டுரை கவிதைப் போட்டிகளை நடத்துவர். அத்தோடு ஊரிலுள்ள நூல்நிலையத்தில் வாசிப்பு சம்பந்தமான சில போட்டிகள் நடைபெறும். ஒக்டோபர் மாதம் கழிந்ததும் வாசிப்புப் பற்றிய பேச்சுக்களே ஓழிந்துவிடும்.

தற்காலம் அறிவுப் பிரவாகம் ஊற்றெடுக்கின்ற காலம். இந்நூற்றாண்டை அறிவுமையம் நிறைந்த நூற்றாண்டு என்கின்றோம். புதியபுதிய இணையத்தளங்களில் இணையப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டு கணனியுடனான தொடர்பாடல் நிறைந்துள்ள ஒருகாலம். இந்நிலையில் நமது அன்றாட வாழ்விலே எழுத்தறிவின் தன்மையை பிரயோசனப்படுத்த வேண்டுமேயானால் நம் வாசிப்புத் திறனைப் பலப்படுத்த வேண்டியது அத்தியாவசியமாகும்.

ஆரம்ப வகுப்புக்களில் மாணவரில் விரைவான வாசிப்பினை ஏற்படுத்துவதற்கான பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தவகையில் பாடசாலைகளில் நடைபெறும் பல்வேறு நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்துதல் சிறப்பானதாகும். காலைக் கூட்டத்தின்போது நற்சிந்தனை வாசித்தல், அன்றைய செய்திகளை வாசித்தல் பேச்சுக்களை பேசுதல் இவ்வாறான செயற்பாடுகளில் அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் நல்ல பேச்சாளர்களாகவும், அறிவிப்பாளர்களாகவும், சமுதாயத்தை வழிநடாத்துபவர்களாகவும் அமைவதற்கான அடித்தளமாக வாசிப்புத் துறையே காணப்படுகின்றது.

எழுத்தறிவுக்கு அடிப்படையாக அமைகின்ற வாசிப்புத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் பல நாடுகளில் நூலகங்கள் தான் பிரதான பாத்திரத்தை வகிக்கின்றன. யாழ்ப்பாண நூலகம் ஒரு காலத்தில் தெற்காசியாவிலேயே புகழ்பெற்ற நூலகமாக காட்சியளித்தது. யாழ்ப்பாணத்தின் அறிவுப்புரட்சியை பொறுக்க முடியாத சிலரால் யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்டது.

அறிஞர் ஒருவரின் கூற்றுப்படி "எழுத்தறிவு இல்லாதிருப்பது பெரியதோர் குற்றமல்ல", ஆனால் எழுத்தறிவு இருந்தும் வாசிக்காமல் இருப்பது தான் பெரிய குற்றமாகும்" எனக் கூறுகின்றார். அப்படியான குற்றவாளிகளாக நாம் ஆகாமல் வாசிப்பு நூல்களையும், பத்திரிகைகளையும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல் உளத்திற்கு நலமாய் அமையும்.

இன்றைய காலம் கணனிப்புரட்சி உலகை ஆட்டிப்படைக்கும் காலம். எந்தவொரு தொழில்புரிகின்றவர்களும் தமக்கான பணியினை மேம்படுத்துவதற்கு புதியபுதிய தகவல்கள் உள்வாங்கப்படுவதற்கும் மாற்றங்களை காண்பதற்கும் வாசிப்பு முக்கிய பங்காற்றுகின்றது. எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்பார்கள். நவீன இலத்திரனியல் சாதனங்கள் வியாபித்து வந்தாலும் வாசிப்பதை தவிர்க்க முடியாது. எதனையும் வாசித்தே அதன் உள்ளார்ந்த கருத்தினை அறிய முடியும்.

எனவே, வாசிப்பின் அவசியத்தையும் அருமையையும் விளங்கிக்கொண்டு நாமும் வாசித்து மற்றவர்களுக்கும் இயன்றளவு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். கால்ஃபோர் என்ற அறிஞர் "நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்ததற்குப் பிறகு அடுத்து நாம் தேர்ந்தெடுக்க வேண்டியது நல்ல புத்தகங்களைத் தான்" என்று கூறுகின்றார். ஆகவே நூல்களினதும் நூலகங்களினதும் முக்கியத்துவங்களினை உணர்ந்து வாசிப்புப் பழக்கத்தை நம் சமூகத்தில் மேலோங்கச் செய்வது நம் அனைவரினதும் தலையாய பணியாகும்.

---

# English as a second Language



**Mrs.Ampika Sivatheepan**
**HNDE, Justice of Peace.(J.P)**
**Teacher.**

The world is an increasingly globalized place where individuals are communicating among and between multiple culture each day. Today, an individual has access to a vast array of information from a variety of world cultures at the touch of a button. For those of us in the English speaking world, we take access to this information for granted. Elsewhere, however, much of the world's information is beyond their reach, locked in English. That is one reason why learning English as a second language has become so popular. In fact English is now the world's most widely spoken second language, surpassing all others. In fact more people now speak English as a second language than as their first language.

As result, there has never been a greater demand for classes to learn English as a second language. English is the gateway to a world of knowledge, commerce and culture a lingua franca that gives a student access to the world in a way that other language do not. Just as Latin was the most important language for a hundred, English is today the key to participating in the global conversation. There are a variety of ways to learn English as a second language, including computer programs, audio tapes, classes and immersion. Picking the right method for you requires some insight and self-understanding.

According to this teaching English as second language is an important task that produces a number of powerful rewards. It is noble calling empowering students to take their places in the global community and become active participants in the global conversation.

Today's English language learners are a diverse collection of immigrants, business people, students, and artists who share a dedication to the English language and a love of learning. The gift of a second language is a window onto a new world, bringing into focus a wealth of conversation, information, and understanding that would otherwise be forever closed to the students who seek to learn a new language. We therefore look forward every day to giving our students the tools to succeed in all their dreams.

# ஆரம்பக் கல்வியும் விளையாட்டு முறை கற்பித்தலும்



திருமதி.யோகலட்சுமி சுப்பிரமணியம்
**Primary Trd**

ஆரம்பக்கல்வி என்பது 5வயது - 11வயது வரை உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களது ஆளுமையை விருத்தி செய்வதற்கான அனுபவங்களை வழங்குதலே ஆரம்பக்கல்வி என்று கூறப்படுகின்றது. ஒரு வீட்டிற்கு அத்திவாரம் எவ்வளவு முக்கியமானதாக விளங்குகின்றதோ அதேபோல ஒருவனுடைய கல்வியின் அத்திவாரமாக விளங்குவது ஆரம்பக் கல்வியே என்றால் மிகையாகாது. எனவே இந்தக் கல்வியினை ஆரம்பத்தில் குழந்தைகள் சரியான முறையில் கற்க வேண்டும். சரியாக முறையில் கற்காதுவிடில் அவர்களின் எதிர்காலம் ஒரு கேள்விக் குறியாக மாறிவிடும்.

வீட்டுச் சூழலில் இருந்து பாடசாலைக்கு காலடி எடுத்து வைக்கும் மாணவனை சரியான முறையில் ஆற்றுப்படுத்துவது ஒரு ஆரம்பக் கல்வி ஆசிரியரின் முக்கிய கடமையாக விளங்குகின்றது. ஆரம்பக்கல்வி ஆசிரியர் மலர்ந்த முகமும் மகிழ்ச்சியான தோற்றமும் உடையவராக இருந்ததோடு மாணவர்களை அன்பாக வழிநடத்துதல் இனிய எளிய சொற்களோடு உரையாடுதல், ஒழுக்கம் சுத்தம் உடையராக இருத்தல் என்பவற்றில் மாணவருக்கு சிறந்த வழிகாட்டியாக விளங்கவேண்டும். குழந்தைகளின் அறிவு, திறன், மனப்பாங்கை வளர்த்தெடுக்க வேண்டிய பெரும்பணி ஆசிரியரையே சாரும்.

இந்த வகையிலே ஆரம்பக்கல்வி ஆசிரியருக்கு மிகவும் பொருத்தமான கற்பித்தல் முறைகள் பல உண்டு. அவற்றில் மாணவர்கள் பெரிதும் விரும்புகின்ற கற்பித்தல் முறையாக விளங்குவது விளையாட்டு முறையான கற்பித்தல் ஆகும். இவ்விளையாட்டு முறையானது பிள்ளையின் இயல்பான நடத்தையை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறையாகும். விளையாட்டு மூலம் பிள்ளை பிற்கால வாழ்விற்கு தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றான். விளையாட்டு முறை பிள்ளைகளுக்கு உள்ள மேலதிக மேலதிக குறும்பு செய்யும் முறைகளையும் குறைப்பதற்கு உதவுகின்றது. அத்துடன் உளவளர்ச்சிக்கும் உதவுகின்றது. பிள்ளைகள் கல்விச் செயற்பாடுகளில் சந்தோசமாக ஈடுபட இது உதவுகின்றது. மற்றும் பிள்ளைகளின் சமூக விருத்திக்கும் பிறருடன் சேர்ந்து வாழவும் ஒத்துழைப்பு, தலைமை தாங்கும் பண்பு, பின்பற்றுதல் ஆகிய சமூகத்திறன்களை பயின்று கொள்கின்றனர்.

பிள்ளைகளின் உள்ளம் விளையாட்டுத்தன்மை உடையதல்ல. செயலில் கவனமாக இருப்பதே அவர்களுடைய உள்ளத்தில் மிக முக்கியமான இயல்பாகும். பிள்ளைகளைப் போல செயலில் கவனமுள்ள வேறு எவ்வுயிரையும் காணமுடியாது என்ற கருத்தை உடையவர் ''கார்டுவல்க்'' பிள்ளைகள் தாம் செய்யும் வேலைகளை ஏதோ ஒரு நோக்கத்திற்காக செய்கிறோம் என்பதை உணர்ந்து கொள்வார்கள். அதனால் அவர்களுக்கு அவ்வேலைகளில் நாட்டமும் விருப்பமும் ஏற்பட்டு விடுகின்றது. அதனால் அவ்வேலையில் மிகுந்த உற்சாகத்துடனும் ஈடுபடுகின்றனர். இத்தகையதொரு நிலையை கற்றலிலும் பிள்ளைகளிடம் ஏற்படச் செய்வதே விளையாட்டுமுறையாகும். எனவே, விளையாட்டு விளையாட்டு ஏதேனும் ஒரு குறிக்கோளை இலக்காக வைத்து நடைபெற வேண்டும். விளையாட்டு முறை மூலம் கற்றலுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது சாரணம் இயக்கம் ஆகும். சாரணர் கடமைகள் பிள்ளைகளுக்கு விளையாட்டுடன் சேர்ந்த வேலையாக அமைந்த போதிலும் அவற்றின் மூலம் அவர்கள் பெறும் பயன் அளவிடற்கரியது.

விளையாட்டு முறை மூலம் மாணவர்கள் தம் திறமைகளை வெளிப்படுத்த ஆசிரியர் உதவி செய்யலாம். இம்முறையில் ஆசிரியர் ஒருவழிகாட்டியாகவே அமைகின்றார். அவரின் வழிகாட்டலில் செயலைச் சாதிப்பவர்கள் பிள்ளைகளே. இம்முறையிலே பிள்ளைகள் தமக்கு விருப்பமான நாடகங்கள் தயாரித்து நடித்தல், சொற்பேருரைகள், கற்றல் தொடர்பான நிகழ்ச்சிகள் தயாரித்தல் போன்ற எல்லா விடயங்களும் அடங்கும். பிள்ளைகள் தாமே விளையாட்டை தயாரித்து செயற்படும் போது மொழித்திறன், கணித்திறன் போன்ற திறன்களை வளர்த்துக் கொள்கின்றனர். மகிழ்ச்சி காரணமாக அனுபவங்கள் மூலம் அவர்களிடம் கற்றல் சிறப்பாக நடைபெறுகின்றது. எனவே இக்கல்வியை அவன் விளையாட்டுமுறை மூலம் கற்பதனால் அவன் இலகுவாக கற்கமுடியவதோடு இக்கற்றல் அனுபவங்கள் அவனுடைய மனதிலே ஆழமாகப் பதிந்துவிடுகின்றன. எனவே, ஆரம்பக் கல்வியில் விளையாட்டு முறை கற்பித்தல் மிகவும் அவசியமாகின்றது. இன்றைய காலப்பகுதியில் விளையாட்டுமுறைகள் மூலமாகவே கற்றல், கற்பித்தல்கள் சிறப்பாக நடைபெறுவதை பாடசாலைகளில் நாம் அன்றாடம் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே மாணவர்கள் இம்முறையினூடாக சுதந்திரமாக சந்தோசமாக கற்க முடிகின்றது. எனவே ஆரம்பக் கல்வியில் விளையாட்டுமுறைக் கற்பித்தல் மிகமிக அவசியமானது என்று கூறிக் கொள்ளலாம்.

# தமிழில் சிறுவர் இலக்கியம்




**திரு.கே.சிவராசா**
B.A (Hons) PGDE,
M.A. in Tamil($1^{st}$ class)
**ஆசிரியர்**
யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்


இலக்கியம் என்பது உணர்வுப் பரிமாற்ற ஊடகம் என்ற நிலையில் சமுதாயத்தின் அடித்தள சமூக அசைவியக்கத்தை கட்டமைக்கும் ஆற்றலும் இலக்கியங்களுக்கு உண்டு என்பதை வரலாறுகள் மெய்ப்பித்தும் உள்ளன. அத்தகு ஆற்றல்மிகு இலக்கியங்களில் சிறுவர் இலக்கியமும் இன்றியமையாத இடத்திற்குரியதே. ஏனெனில் இலக்கியத்தின் மீதான ஈர்ப்பிற்கும் ஈடுபாட்டிற்கும் சிறுவர் இலக்கியங்களே அடித்தளமிடுகின்றன.

ஈராயிரம் ஆண்டுகால செழுமைமிக்க தமிழ்மொழியில் இலக்கியங்களுக்கான பிரக்ஞை பூர்வமான முன்னெடுப்புக்கள் மிகக்கருகலாகவே காணப்பட்டன. தொல்காப்பியத்திலிருந்து பெறப்படும் சூத்திரம் ஒன்று சிறுவர் இலக்கியத்திற்கான முன்மொழிவாக கருதப்படுகின்றது. தவிர ஔவை, அதிவீரராம பாண்டியன் முதலானோரும் குழந்தை இலக்கியங்களை இயற்ற முயன்றனர். எனினும் அவை சிறுவர்களின் அறிவு முதிர்ச்சியை கருத்தில் எடுக்கவில்லை.

குழந்தைகளின் உணர்வுகளைத் தூண்டி உற்சாகமூட்டக் கூடிய சிறுவர் பாடல்கள் மரபுத் தமிழ் இலக்கிய முயற்சிகளில் இடம்பெற்றிருக்கவில்லை. ''தமிழ்சிறுவர் இலக்கியம்எனச் சிறப்பாக கூறக்கூடியது ஒப்பீட்டளவில் மிகக் குறைவு" என்ற பேராசிரியர் க.கைலாசபதியின் கூற்று இங்கு மனம்கொள்ளத் தக்கது. தமிழில் எழுந்த ஆத்திசூடி, கொன்னைறவேந்தன், வெற்றிவேட்கை முதலியவை புறத்தோற்றத்தால் குழந்தை இலக்கியங்களாகவே தோன்றினும் உள்ளடக்கத்தால் சிறுவர் இலக்கியங்களாகா அவை போதனை நோக்காக எழுந்தவை என்பதுடன் ஆசானும் அகராதியும் இன்றி விளங்கிக்கொள்ள முடியாதவை. பன்நெடும் காலமாக மரபுவழிக்கல்விப் பாரம்பரியத்தில் கட்டாய மனனத்திற்கு உரியவையாக இருந்த இவ்விலக்கியங்கள் சிறுவர்களின் மனதை வென்றெடுப்பதற்கு பதிலாக சலிப்பையே வலுவித்தன.

இனி, சிறுவர் இலக்கியம் எனும்போது பாடல் மட்டுமன்றி சிறுவர் கதைகள், சிறுவர் நாடகங்கள், சிறுவர்களுக்கான நாவல் சினிமா, வானொலி நிகழ்ச்சிகள், சஞ்சிகைகள், சித்திரங்கள் எனும் பரந்த தளத்தில்வைத்து நோக்கப்பட வேண்டும். எனினும் தமிழில் முனைப்பு பெற்றிருந்தகவிதைப் பாரம்பரியத்தின் வீரியத்தினால் இருபதாம்நூற்றாண்டு வரையில்குழந்தை இலக்கிய முயற்சிகளும் கவிதைகளோடு மட்டுப்பட்டு விட்டன.

தாளலயத்தோடு கூடிய இசை, சிறுவர்மனதைக் கவர்வது அதனால் தான் தாயின் ஆராரோ பாட்டு குழந்தையை ஆற்றுப்படுத்தி துயில்விக்கின்றது. இந்தத் தாலாட்டுமுதல் விளையாட்டுப் பாடல்கள் வரையான நாட்டார் இலக்கிய முயற்சிகளில் சிறுவர் இலக்கியங்களிற்கான அடிப்படைகளைக் காணலாம். இவற்றின் இழுமென்ற ஓசை நயமும், எளிமையும் பேச்சோசைப் பாங்கும் சிறுவரைத் கவரத் தக்கனவாக உள்ளன. இவ்வாறு சமூகத்தில் குழந்தைகள் காணும் காட்சிகள், நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக எழுந்த நாட்டார் பாடல்கள், கதைப் பாடல்கள் என்பவை சிறுவர் மனங்களை மகிழ்விப்பனவாக காணப்படுகின்றன.

ஈழத்தமிழில் ''சிறுவர் பாடல்'' என்ற பிரக்ஞை பூர்வமான தொகுப்பு முயற்சியாக க.ச.அருணாசலத்தின் ''பிள்ளைப்பாட்டு'' (1935) எனும் தொகுப்பு முயற்சியை குறிப்பிடலாம். வாய்மொழிப் பாடல் மரபோடு ஒட்டிய எளிமையும் சந்த நயமும் கொண்ட இப்பாடல்கள் பலரையும் சிறுவர் பாடல்களின் மீது ஆர்வம் கொள்ளவைத்தன. இதன் விளைவாக நவாலியூர் சோமசுந்தரப் புலவர், பீதாம்பரன், பஞ்சாட்சர ஐயர், கே.எஸ்.ஆழ்வாப்பிள்ளை, க.சின்னத்தம்பி முதலியோர் சிறுவர் பாடலாக்க முயற்சிகளில் ஈடுபட்டனர். அத்துடன் மு.நல்லதம்பி, வேந்தனார், அம்பிகைபாகன், சத்தியசீலன், அமிர்தநாதர், ஸுபைர், கோசுதா முதலியோர் சிறுவர்களின் உளவயதுக்கு ஏற்றவகையில் கவிதைகளை யாத்தனர்.

தமிழ்நாட்டை பொறுத்தவரை பாரதியாரின் ''ஓடிவிளையாடு பாப்பா'', உலகநாதரின் ''ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்'' முதலியவை சிறந்த சிறுவர் பாடலாக்க முயற்சிகளாகும். தவிர கவிமணி, கம்பதாசன் முதலிய பலரும் சிறுவர்

பாடலாக்க முயற்சிகளில் ஈடுபட்டபோதும் அழ.வள்ளியப்பா அவர்கள் குழந்தைக் கவிஞர் என்ற நிலையான சிறப்பைப் பெற்றுவிட்டார். சிறுவர்களுக்கு பரீட்சயமான இனிய அழகிய சொற்களையும் நிகழ்ச்சிகளையும் மனதிற்கொண்டு எழுந்தமை அழ.வள்ளியப்பாவின் புகழுக்கு காரணங்களாயின. ஈழத்துக் கவிதை மரபிலே செல்லையாவின் இளம்பிறை, வேந்தனாரின் அம்மா, கவிஞர் இ.நாகராயனின் பட்டுச்சட்டை, க.வீரகத்தியின் பலூன், என்பவை சிறுவர்களால் அதிகம் விரும்பப்படுபவை. வகைமாதிரியாக

**“அம்மா வெளியே வா அம்மா**
**அழகாய் மேலே பார் அம்மா**
**சும்மா இருந்த சந்திரனை**
**துண்டாய் வெட்டின தாரம்மா”**

என்ற இளம்பிறைப் பாடலைக் குறிப்பிடலாம். என்றாலும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் கத்தரி வெருளி,ஆடிப்பிறப்பு முதலிய பாடல்கள் ஈழத்தில் மிகப்பிரபல்யமானவை. அதனால் அவர் தங்கத்தாத்தா என செல்லமாக அழைக்கப்படுகின்றார்.

சிறுவர் பாடல்களில் கதைப்பாடல்களுக்கும் காத்திரமான இடம் உண்டு. சிறுவர் மனங்களில் விழுமியச்சிந்தனைகளை நிலைக்கச் செய்ய கதைப்பாடல்கள் பெரிதும் உதவுகின்றன. வீமா வீமா ஓடிவா, பருத்தித்துறை ஊராம், எலியும் சேவலும் முதலியவைசோமசுந்தரப் புலவரின் கதைப்பாடல்கள் மிகவும் பிரபல்யமானவை. கதைப்பாடல்களில் கருத்துக்களிலும் பார்க்க காட்சி வர்ணனைகள் முக்கியம் பெற வேண்டுமென்பது நவீன சித்தாந்தமாக காணப்படுகின்றது.

சிறுவர் இலக்கியங்களில் குழந்தைகளுக்கான கதைகளும் உள்ளடங்கியுள்ளன. ஆறுமுகநாவலர் குமாரசுவாமிப் புலவர் முதலானோர் போதனைக்கதைகள் சிலவற்றை எழுதியுள்ளனர். அழகுசுந்தர தேசிகர்,சோ.நடராஜன் போன்றோரும் சிறுவர்களை பாடல்களை எழுதினர். பஞ்சதந்திரக் கதைகளில் இருந்த பல சிறுவர் கதைகள் தோன்றினும் அவை சிறுவர்களின் உளத்தேவைகளுக்கன்றி போதனைக்கே முக்கியம் தந்தன. பூவண்ணன் எழுதிய கதைகள் சிறுவர்களை கவர்வதாக அமைந்தன. ஈழத்தில் த.கலாமணி, கோகிலா மகேந்திரன் முதலியோர், சிறுவர்களின் உளவியல்சார் கதைகளை எழுதினர். எவ்வாறாயினும் தமிழில் பெரும்பாலான சிறுவர் கதைகள் குழந்தை, இளைஞர் என்ற வேறுபாடு இன்றியே எழுந்தன.

தற்காலத்தில் மேலை நாடுகளில் பிரபல்யம் பெற்ற சிறுவர் இலக்கியங்கள் மொழிபெயர்ப்புக்களாக கிடைக்கின்றன. இவற்றின் உந்துதலால் எதிர்காலத்தில் சிறந்த சிறுவர் இலக்கியங்கள் தமிழிலும் வரலாம் என்ற நம்பிக்கை எழுகின்றது.

---

## கணிதத்தின் கண்கள்! தமிழ் எண்கள்!

| | | |
|---|---|---|
| ௧ | ௧ | 1 |
| ௨ | ௨ | 2 |
| ௩ | ௩ | 3 |
| ௪ | ௪ | 4 |
| ௫ | ௫ | 5 |
| ௬ | ௬ | 6 |
| ௭ | ௭ | 7 |
| ௮ | ௮ | 8 |
| ௯ | ௯ | 9 |
| ௰ | ௰ | 10 |

## தமிழின் சிறப்பு
## பண்டையத் தமிழ் எண் வடிவங்கள்

| | |
|---|---|
| ௧ = 1 | ௱௫௰௬ = 156 |
| ௨ = 2 | ௨௱ = 200 |
| ௩ = 3 | ௩௱ = 300 |
| ௪ = 4 | ௲ = 1000 |
| ௫ = 5 | ௲௧ = 1001 |
| ௬ = 6 | ௲௪௰ = 1040 |
| ௭ = 7 | ௮௲ = 8000 |
| ௮ = 8 | ௰௲ = 10,000 |
| ௯ = 9 | ௭௰௲ = 70,000 |
| ௰ = 10 | ௯௰௲ = 90,000 |
| ௰௧ = 11 | ௱௲ = 100,000 (lakh) |
| ௰௨ = 12 | ௮௱௲ = 800,000 |
| ௰௩ = 13 | ௰௱௲ = 1,000,000 (10 lakhs) |
| ௰௪ = 14 | ௯௰௱௲ = 9,000,000 |
| ௰௫ = 15 | ௱௱௲ = 10,000,000 (crore) |
| ௰௬ = 16 | ௰௱௱௲ = 100,000,000 (10 crore) |
| ௰௭ = 17 | ௱௱௱௲ = 1,000,000,000 (100 crore) |
| ௰௮ = 18 | ௲௱௱௲ = 10,000,000,000 (thousand crore) |
| ௰௯ = 19 | ௰௲௱௱௲ = 100,000,000,000 (10 thousand crore) |
| ௨௰ = 20 | ௱௲௱௱௲ = 1,000,000,000,000 (lakh crore) |
| ௱ = 100 | ௱௱௲௱௱௲ = 100,000,000,000,000 (crore crore) |

தமிழின் சிறப்பை அனைவருக்கும் தெரியப்படுத்துங்கள்

# ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்

**பேராசிரியர்.கலைவாணி இராமநாதன்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

இந்து சமயக் கல்வி செல்நெறியானது புராதன காலம் முதல் சமய வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்திருந்தது. கல்விச் செல்வத்தின் இன்றியமையாமை பற்றி அறநூல்களும் ஏராளமாக இயம்பியுள்ளன. சமயக்கல்வி, உலகியற்கல்வி, மெஞ்ஞானக்கல்வி, என அவை புராதன காலம் கற்பிக்கப்பட்டு வந்தன. அக்காலத்தில் ஆரண்யகங்களும் பள்ளிக் கூடங்களாக விளங்கின. நாட்டை ஆளும் மன்னர்கள், அரச குமாரர்கள் முதல் அந்தணச்சிறார்கள், ஏனைய வகுப்பினரும் ஆச்சிரமம் சென்று சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்து வல்லவர்களாகவும் நல்லவர்களாகவும் தம்மை ஆக்கிக் கொண்டனர். நாட்டை ஆட்சி புரிவோரும், ஆசிரியர்களும் கட்டாயமாக தத்துவ சாஸ்திரம் படிக்க வேண்டும் என தர்ம சாத்திர நூல்கள் விதித்துள்ளன.

பாண்டவர்களும், தசரத மன்னனும் ஜனக மகாராஜாவும், துவாரகை மன்னன் ஸ்ரீ கிருஸ்ணனும் கூட இளவரசர்களாக இருக்கும் போது ஆரண்யகம் சென்று குருவிடம் கல்வி பயின்று வந்துள்ளனர். கல்வி கற்கும் செயற்பாட்டிலே புராதன காலம் மனைக் கல்விப் முதலிடம் அளிக்கப்பட்டது. ஆன்மவித்தை பற்றியவிடத்து இயற்கையே சிறந்த கல்விக்கூடமாவும் இயற்கையிடத்திலே கற்றுக்கொள்ள வேண்டிய அறநெறிக்கல்வி பற்றியும் அவற்றிற்கான செயல்முறைப் பயிற்சிகளும் குருவின் கல்விக் கூடத்தில் வழங்கப்பட்டன. சான்றாக பசுக்களை மேய்த்தலும் உயிர்களிடத்து அன்பு செலுத்துவதும் இயற்கை வளங்களைப் பராமரிப்பதும், ஓய்வு நேரங்களில் பழக்கப்படுத்தப்பட்டன. உபநிடத காலத்தில் ஆலம் விதை முலமும், உப்பு நீரும் கொண்டும் கூட ஆத்ம தத்துவம் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு செயல்முறை விளக்கமும் அளிக்கப்பட்டது.

கற்றல் செயற்பாட்டிலே குறிப்பாக பாடம் படித்தல், பாடத்தை கற்றல் எனக் குறிப்பிடாது பாடமுறையினை 'ஓதுதல்' என்பதே உயர்ந்த வழிமுறையாகப் போதிக்கப்பட்டது. வேதநூல்கள் கல்வி கற்கும் பருவத்தை பிரமச்சரியம் அல்லது மாணவநிலை என வகைப்படுத்தி ஏறக்குறைய ஐந்து முதல் பன்னிரண்டு வயதுவரை ஆரம்பக் கல்வியும், ஆன்மீகக்கல்வியையும் இணைத்து போதித்தனர். வேதம் படித்தல் எனக் குறிப்பிடாது 'வேதம் ஓதுதல்' என்றே குறிப்பிடப்பட்டது. வேதக் கல்வி பயிலும் மாணவர்கள் மணடூகம் எல்லாம் ஒன்றாகக்கருதுவது போல வேதப்பாடல்களை சத்தம் போட்டு ஓதி வந்தனர் என ரிக் வேதம் சுட்டும். ''வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி'' என்று இதனைச் சம்பந்தர் பாடினார். 'ஓதுதல்' என்பது மனனம் செய்தல் என்பதாகும்.

மனதிலே மீண்டும் மீண்டும் உயர்ந்த சிந்தனைகளைப் பதிவாக்கிக் கொள்ளுதலாகும். இன்று மூளையை வெறுமையாக்கி வைக்கும் நிலைதான் பெரிதும் காணப்படுகிறது. 15ம் 15ம் = 30 என்பதற்கும் கல்குலேற்றர் தேவைப்படும் காலமாகிவிட்டது. வேதாகமக் கல்விக் காலத்தில் கற்றல் செயற்பாட்டிலே சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்றும் அதாவது கேட்டல், தெளிதல், சிந்தித்தல் என்னும் அவதானிப்பு முறைமைகள் முதன்மைப்படுத்தப்பட்டன. ஔவையாரும் ஆத்திசூடியில் 'ஓதுவதொழியேல்' என்றுதான் குறித்து வைத்தார். நன்னெறி என்ற நூலிலும் 'ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்' என்பது வலியுறுத்தப்பட்டது.

தேவாரப் பண்ணிசை பயிலும் போது பாடம் பண்ணுவது - படிப்பது - கற்பது என்ற சொற்கள் உபயோகத்தில் இருக்கவில்லை. 'பண்ணிசை ஓதல்' என்பது மரபுமுறையாகும். சோழர்காலம் தேவாரத் திருமுறைகளை ஆலயங்களில் பாடுவதற்காக அல்ல - ஓதுவதற்காக - தேவார ஓதுவார்கள் தஞ்சைப் பெரும் கோயில் முதலிய பல கோயில்களில் நியமிக்கப்பட்டனர். 'பஞ்சபுராணம் அருளிப்பாடுக' என்றுதான் இன்று கோயில்களில் சொல்கிறார்கள். அந்தக் காலத்திலே 'பஞ்சபுராணம் ஓதுக' என்றே கூறப்பட்டது. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது - நாதன் நாமம் நமச்சிவாயவே' என்ற நமச்சிவாயப் பதிகம் இக்கற்றல் பண்பாட்டினை அன்றே சுட்டிக்காட்டியது. இன்று திருக்கோயில்களில் பஞ்சபுராணம் ஓதுவதற்கே ஆளில்லாத பஞ்சமாகவிட்ட நிலை காணப்படுவது வருத்தமான விடயமாகும்.

வேத இலக்கியம் வகுத்துள்ள மாணவன் ஒருவனது கல்விப் பயிற்சியானது ஆசாரியார் அல்லதுகுருவின்ஆச்சிரமப் பள்ளியில் தான் இடம்பெற்றது. இன்றைய ''ஆசிரியர்'' என்ற பதம் அக்காலத்தில் ''ஆசாரியார்'' என்றே கூறப்பட்டது. ஆசாரியார் என்றார் ஆசாரம் மிக்கவர். நிறைவானகல்வி ஒழுக்கம் உடையவர் எனப் பொருள் தரும். இன்றைய கல்வியாளரிடம் ஒழுங்கும் - ஓதுவிக்கும் ஒழுங்கு காணப்படாமை யாற்போலும் ''ஆசாரியார்'' என்ற பதம் ''ஆசிரியர்'' என்ற சொல்லாக்கம் பெற்றதோ

என்பது சிந்தனைக்குரியது. அன்று மாணவன் பயின்ற முதல் பாடம் சந்தியாவந்தனம். காலை, மாலை வழிபாடு - காயத்திரி ஓதுதல், ஆசமனம் செய்தல் - கதிரோனுக்கு நீர்வார்த்தலும், தர்ப்பணம் செய்தலும் ஆகும். இவ்வாறு இயற்கையைப் பேணும் வழிபாடே ஆரோக்கிய வாழ்வின் அத்திவாரம் என ஓதுவிக்கப்பட்டது. புத்தகப்பயிற்சியும் படிப்பும் பிற்காலம் அறிவியல்துறை வளர்ந்தும் ஓதுதல் - கற்றல், கற்பித்தல் முறைமைக்கு மாற்றமடைந்தது.

வேதக்காலக் கல்வியில் குருவானவர் மாணாக்கர் அருகில் தரையில் அமர்ந்து வேதாசார தருமத்தைச் சொல்லிக் கொடுக்கும் பயிற்சியில் ஈடுபடுவார். தன்னைச் சூழவுள்ள மாணாக்கருக்கு பலமணிநேரம் வாய்ப்பாடமாக பாடல்களைச் சொல்ல மாணவர்கள் அதனைக் கேட்டு அப்பாடல்களை ஒவ்வொன்றாக நெட்டுறப் போட்டு குருவானவருக்கு ஒப்புவித்து வந்தனர். இவ்வாறாக வேதப்பாடல்களை மனப்பாடமாகும் வரை பாசுரங்கள் திருத்தமாக செய்தற் பொருட்டு பல வழிகளிலும் பாடம் ஓதப்பட்டன. பின்னர் அவற்றினை தனித்தனியாக பதம்பிரித்து (பதமுறை) சொற்களில் ஒன்றைவிட்டு ஒன்றைக் கூட்டி இரண்டாக இணைத்தும் (கிரமபாடம்) ஒழுங்குபடுத்தியும் பாடமோதி வந்தனர். வேதநூல் கல்வியில் கற்பம், சிற்சை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம் என்பவை சிறப்பாக அறிவுறுத்தப்பட்டன. ஏனைய வானியல், கணிதம், இலக்கியம், மருத்துவம் போன்ற உலகியல் பாடங்களும் சொல்லிக் கொடுக்கப்பட்டன.

காலப்போக்கில் சிறப்பெய்திய அறிவுசார்ந்த ஆசாரியார்களால் இடைக்காலத்தில் கல்வி பயிற்றப்பட்ட நிலையங்களில் காசி என்றும் வாரணாசி, பாரத நாட்டின் வடமேற்கிலே தற்ச சீலமும், பீகாரில் நாளந்தாவும், சமய ஆன்மீக கல்வி போதிக்கும் உயர் பல்கலைக்கழக நகரங்களாகவும் விளங்கின. புராதன இலக்கண ஆசிரியர் பாணினியும், அர்த்தசாஸ்திரமும் தந்த கௌடில்யரும் மருத்துவக் கலையில் புலமைபெற்று விளங்கிய தற்சீலப் பல்கலைக்கழகத்துடன் தொடர்புகொண்ட புகழ்பெற்ற பேரறஞறிர்கள் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். இன்றைய உலகில் இவர்கள்வாழ்ந்திருந்தால் நோபல் பரிசே அவர்கட்கு அறிஞர் உலகம் வழங்கியிருக்கும். இவ்வாறு இந்துக்களின் கல்விச் சிந்தனையில் ஆன்மீகக் கல்வி, ஒழுக்கக் கல்வி, தொழிற்கல்வி, படைக்கலப் பயிற்சிக் கல்வி என பன்முகப்படுத்தப்பட்ட வாழ்வியலை வளமாக்கும் பண்பாட்டுக் கல்விநெறி முதன்மைப்படுத்தப்பட்டது. இன்றைய கல்விமுறை உள்ளத்தைப் புத்த கஉள்ளடக்கத்தால் நிரப்புவதும் பரீட்சை மண்டபத்தில் அவற்றினை வெளியேற்றுதலும், பின்னர் வெற்று உள்ளத்தோடு வீடு திரும்புவதுமாக அமைகின்றது. உண்மைக் கல்வி உள்ளத்தை பண்படுத்துவதனைக் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதனை மனித மேம்பாட்டுக் கல்வியாளர்களும் வெளிப்படுத்துவதிலிருந்து தற்காலக் கல்விப்பண்பாட்டு விழுமியங்களிலிருந்து விலகிச் செல்வதனை உணரமுடியும். மீண்டும்எமது இளம்சிறார்களிடம் கல்வியுடன் இணைந்த ஒழுக்கப் பண்பாடு வளர வேண்டும் எனில் புராதன கல்விச் சிந்தனை கருவூலமான ''ஓதுவது ஒழியேல்'' என்ற வரன்முறைக் கல்விச் செயற்பாட்டை பாலர் வகுப்புமுதல் 5ம் ஆண்டுவரை அறிமுகப்படுத்துவது அவசியமாகும்.

''ஓதுவித்தவர் கூலிகொடாதவர் - மாதவர்க்கதி பாதகமானவர்'' என்கிறார் வாரியார் சுவாமிகள். கடல்நீரை மேகம்பருகி உவர் நீரை நன்னீராகப் பொழிவதுபோல குருவானவர் கல்வி என்னும் கரையாகிய கடலைக்கடந்து மாணவர் பக்குவநிலைக்கு தக்கவாறு ஓதுவித்துக் கொடுப்பார். அறநூல்களை ஓதும்போது ஐயம், திரிவு, மயக்கம் முதலிய முக்குற்றங்களை விலக்கி ஓதுதல் வேண்டும். ''ஓதலின் நன்று ஒழுக்கமுடைமை, ஓதார்க்கில்லை ஒழுக்கமும் உயர்வும், ஆர்கலி உலகத்து மக்களெல்லாம் ஓதலில் சிறந்தன்று ஒழுக்கமுடைமை'' என முதுமொழிக் காஞ்சிஎன்ற நூலும் ஓதுவதன் பயனைதெளிவாக உணர்த்திற்று.

ஓதுகின்ற நாட்கள் குற்றமற்றவையாக அமைய வேண்டும் என்பது ஔவையார் கூறும் விதிமுறையாகும். ''அட்டமியில் ஓதினால் ஆசானுக்கு ஆகாது - சீடருக்கு பதினான்கு தீதாகும், கெட்டவா, வித்தைக்கு நாசமாம் பிரதமையில் - பித்தரும் பேசார் பிழை'' என்பது கல்வியாகிய ஓதுகின்ற கலையினை நல்ல நாளில் ஆரம்பிக்க வேண்டும் என்ற அறிவுரையாகவுள்ளது. எனவே உலகியற் கல்வியுடன் ஞானவித்தையையும் அறநூல்களையும் அறிவை ஞானமாக்கும் அறநூல்களையும் தேவார திருவாசகங்களையும் பண்ணோடு ஓதி வருதலால் ஆத்ம வித்தையும், ஆனந்தமும் தித்திக்கும்.






# ஆசிரியரைப் பணிவோம்



**முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கல்வி மனிதனுக்கு கண் போன்றது. அந்தக் கண்ணுக்குப் பார்வையைக் கொடுப்பவர், அறிவுக் கண்ணைத் திறந்து வைப்பவர் என ஆசிரியர் போற்றப்படுகின்றார். அவர் மன இருளைப் போக்குபவர். விழிப்புணர்வைத் தருபவர். குரு எனவும் பெயர் பெற்றவர். இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என நமது முன்னோர்கள் கூறியுள்ளனர். பண்டைக் காலத்தில் வாய்மொழிக் கல்வி முறையே இருந்தது. இதனால் குருவிடம் பாடம் கேட்கும்மரபே நிலவியது. பாடத்தைக் கேட்டல்,மனதிலே பதியவைத்தல் டின்ற இரு திறன்களையும் குருவிடதிருந்தே எல்லோரும் பெற்றனர்.

வாழ்க்கைக்கான கல்வியைக் குருவிடம்பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை குருவோடு தங்கியே கற்கும் முறைமை பேணப்பட்டது. இது ''குருகுலக்கல்வி'' என அழைக்கப்பட்டது. இக்கல்வியில் அறநீதி புகட்டல், வித்தைப் பயிற்சி என்பன அடங்கியிருந்தன. ஏறக்குறைய 12 ஆண்டுகள் இக்கல்வி பயிற்றப்பட்டது. குருவுடன் உடனுறைந்து கற்பதால் வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற்றையும் முழுமையாகக்கற்கும் வாய்ப்பும் இருந்தது. குருபத்தினிக்கு வேண்டிய பணிகளையும் மாணவர்கள் செய்து குடும்பநிலையான அறிவையும் பெற்றனர். குருவுக்கு செலுத்தும் தட்சணையாக இப்பணியே அமைந்தது.

குருகுலக்கல்வியில் இயற்கையின் ஆற்றல் பற்றிய தெளிவு சிறப்பாகக் கற்பிக்கப்பட்டது. குருவின் உறைவிடம் இயற்கை சூழலில் அமைந்திருந்தது. இயற்கை தரும் மூலப்பொருட்களால் குடில் அமைக்கப்பட்டது. உணவுத் தேவைக்கான மரம், செடி, கொடி, வளர்ப்பு, பால் தேவையை நிறைவேற்ற விலங்கு வளர்ப்பு என்பனவும் கல்வியோடு இணைந்த பயிற்சிகளாகப் பேணப்பட்டன. இயற்கையும் நமது ஆசிரியரே என்பது சிறப்பாக உணர்த்தப்பட்டது. பூமியைத் தெய்வமாக மதித்து வழிபடும் மரபு பயிற்றப்பட்டது. தாய் தன் மடியிலே குழந்தையை வைத்துப்பேணி வளர்ப்பது போல நிலம் நம்மைத் தாங்கி நிற்கின்றது.

பொறுமை என்னும் பண்பை உணர்த்தும் நல்லாசிரியர் பூமியே. வெப்பத்தையும், வெள்ளத்தையும், பனிக்குளிரையும் அந்தந்தக் காலங்களில் பொறுமையோடுஏற்று வாழப் பூமியே மனிதனுக்குப் பயிற்றுகிறது. வானமும் ஆசிரியராக நின்று மனிதனை வழிநடத்துகிறது.

காலத்தோடு மழைவளம் நல்கி மனிதன் வாழுமிடத்தை வளப்படுத்துகிறது. வானம் பொய்க்காது காலமாரியைப் பொழியும் என்றதொரு நம்பிக்கையை மக்களிடம் சேர்த்துள்ளது.

வானத்திலே வலம்வரும் இரு சுடர்களான கதிரவனும் வெண்ணிலமும் மனிதனுக்குக் காலத்தைக் கற்றுத்தரும் கிணத ஆசிரியர்கள். கதிரவன் நாளின் தொடக்கத்தை உணர்கிறான். பகற்பொழுதின் தொடக்கத்தையும் முடிவையும் கணித்துக் காட்டும் நல்லாசிரியனாக நம்மோடு இருக்கிறான். வெண்ணிலா நமக்கு இரவில் ஒளிதரும் ஒருசுடர் விளக்கு. தேய்வும் வளர்ச்சியும் என்னும்நிலைகளால் ஒரு மாத காலத்தை உணர்த்தும் இன்னொரு கணித ஆசிரியர். முழுநிலவு கண்டுஅதன் தேய்வைப் பார்த்து மீண்டும் அது முழுமுநிலவாக வளர்ச்சியடையும் வரை கடந்து போகும் நாட்களைக்கணக்கிட நிலவு ஒரு நாட்காட்டி ஆசிரியர்.மனித வாழ்வில் இறப்பும் பிறப்பும் மாறிவரும் என்பதை உணரவைக்கும்ளளவள ஆசிரியராகவும் அமைபவர்.

நதியும் கடலும் கூட மனிதனை நெறிப்படுத்தும் நல்லாசிரியர்களே. நதி மனிதனை நீர்ப்பாசனத்திற்குப் பயிற்றுகிறது. வேளாண்மை செய்ய ஆற்றுப்படுத்தும் ஆறும் ஆசிரியராக விளங்குகிறது. ஓடிவரும் நீரைத் தேவைகளுக்குப் பயன்படுத்த மனிதனைப் பயிற்றுகிறது. ஆற்றங் கரைகளிலே வாழும் வாழ்வியலைப் புகட்டுகிறது. நீரின் இன்றியமையாமையை மனிதன் மட்டுமல்ல. ஏனைய உயிரினங்களும் அறிய நதி வழிகாட்டும் ஆசிரியராக விளங்குகின்றது.

கடல் மனிதன் வாழ்வை வளமாக்கப் பல விளையாட்டுப் பொருட்களைப் பெற வழிகாட்டுகின்றது. உப்பு, மீன், கடற்பாசி என உணவுப் பொருட்களைத் தேட வழிகாட்டியது. அதற்கு மேலாக மனிதன் அழகுப் புனைவுகளுக்கான முத்து,சிப்பி, சங்கு போன்ற பொருட்களையும் பெறுவதற்கு ஒரு களஞ்சியமாக அமைந்தது. கடல்வழிப் பயணம்செய்து வணக்கம்என்ற தொழிற்பயிற்சியை வழங்கும் ஆசிரியராகக் கடல் விளங்கியது.

இந்த இயற்கை ஆசிரியர்களைப் போற்ற வேண்டுமென இளங்கோ சிலப்பதிகாரத்தில் பதிவு செய்துள்ளார். அதை வருமாறு காணலாம்.

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச் சென்னி குளிர்வெண்
குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லாள்
ஞாயிறு போற்றுவதும்
காவிரிநாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேருவலனம் திரித லான்
மாமரை போற்றுதும் மாமரை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்கு அவனளி போல
மேல்நின்று தாம் சுரத்தலான்.

திங்களும், ஞாயிறும், மாமழையும் நம்மைப் பேணும் இயற்கைக் காவலர்கள். ஆதலால் அவர்களைப் போற்றி இளங்கோவடிகள் பாடியுள்ளார். அவர்களே நமது முதன்மை ஆசிரியர்கள்.

இயற்கை நமது ஆசிரியர் என்பதை இப்போது யாரும் நினைவிற் கொள்வதில்லை. ஆனால் இயற்கை என்னும் உலகறிந்த நல்லாசிரியரிடம் இன்றைய ஆசிரியர்கள் பெறவேண்டிய பல பயிற்சிகளுள் காலக்கணிப்பு, கோலப்புனைவு, கருவிக்கையாட்சி, மொழித்திறன், இசைப்புலமை, கொடைத்திறன் போன்றவற்றை இயற்கை என்னும் ஆசிரியரிடமிருந்து எளிதாகக் கற்றுக்கொள்ளலாம். கடிகாரம் இல்லாமல் காலம் கணிக்கும் நிலை பண்டைய மக்களிடம் இருந்தது. கதிரவன் நிழல் கணித்து காலக்கடப்பை உணர்த்தினர். இயற்கையின் வண்ணக்கோலங்களும் நிறமாற்றங்களும் மனிதனுக்குப் புனைவுத்திறனை நல்கின. கற்களும் மரங்களும் கொடிகளும் வில், அம்பு போன்ற கருவிகளை அமைக்கப் பயன்பட்டன. காற்று, கடல், இலைகளின், சலசலப்பு, நீரோட்டத்தின் ஒலிக்குறிப்பு என்பன மொழியை உருவாக்கத் துணை செய்தன. ஒலிப்பு முறையால் பெயரிடும் முறைமை தோன்ற இயற்கை என்னும் ஆசிரியரின் வழிகாட்டல் அடிப்படையாக அமைந்ததெனலாம்.

இன்று ஆசிரியர் பணியைப் போற்றுமுகமாக ஆசிரியர் தினம்கொண்டாடப்படுகின்றது. இந்தநிலை மாணவர்களுக்கு ஆசிரியரின் பணிபற்றிய சிறப்பினை விளக்குவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. குருகுலக்கல்வி முறையிலிருந்து பள்ளிக் கல்வி முறைக்கு இன்று மாணவர்மாறியுள்ளனர். அதனால் இயற்கையென்னும் முதன்மை ஆசிரியர் பற்றிய அறிவு அவர்களுக்கு ஊட்டப்படுவதில்லை.

நவீன கல்விப் பயிற்சி நிலையில் ஆசிரியர் பள்ளியில் மட்டும்தொடர்புடையவராக உள்ளார். மேலும் பொறிமுறைக் கல்வியின் முன்னேற்றம்ஆசிரியர் பயிற்றாமல் சுலபமாகவே கல்வி பயிலலாம் என்ற புதிய நம்பிக்கையை மாணவரிடையே தோற்றுவித்துள்ளது. இது அவர்களுக்கு ஒரு துணிவையும் தந்துள்ளது. பொறிமுறைக் கையாட்சியால் எதையும் வெல்லலாம் என நம்பியுள்ளனர். ஆனார் இயற்கை என்னும் ஆசிரியன் அவர்களை நல்வழிப்படுத்துவான். மனிதன் இயற்கையின் வழிகாட்டலில் வளமாக நலமாக வாழ்வான். எனவே அந்த இயற்கை என்னும் ஆசிரியனையே எந்நாளும் பணிந்து வாழ்வோம்.

---






# வகுப்புப் பரிசில்கள் விபரம்

| தரம் | மாணவர் பெயர் | பாடங்களும் நிலைகளும் |
|---|---|---|
| 1 | சு.தஸ்மிகா | தமிழ் -1ம் இடம், கணிதம் - 1ம் இடம்,<br>சுற்றாடல் - 3ம் இடம், பொதுத்தேர்ச்சி - 2ம் இடம் |
| | கோ.கஜனிகா | சுற்றாடல் - 1ம் இடம், தமிழ் - 2ம் இடம்,<br>கணிதம் - 2ம் இடம், பொதுத்தேர்ச்சி - 1ம் இடம் |
| | ஜெ.ஜெனீபா | தமிழ் - 2ம் இடம், சுற்றாடல் - 2ம் இடம்,<br>பொதுத்தேர்ச்சி - 3ம் இடம் |
| | உ.இந்துஜன் | தமிழ் - 3ம் இடம் |
| | சு.பவித்திரன் | கணிதம் - 3ம் இடம் |
| 2 | | |
| | த.தபிசானிக்கா | சுற்றாடல் - 1ம் இடம், தமிழ் - 1ம் இடம்,<br>கணிதம் - 2ம் இடம், பொதுத்தேர்ச்சி - 1ம் இடம் |
| | ரூ.அஜீனா | சுற்றாடல் - 2ம் இடம், தமிழ் - 2ம் இடம்,<br>கணிதம் - 2ம் இடம், பொதுத்தேர்ச்சி - 2ம் இடம் |
| | அ.அபிஷா | தமிழ் - 3ம் இடம் |
| | கோ.திபில்ராஜ் | சுற்றாடல் - 3ம் இடம், பொதுத்தேர்ச்சி - 3ம் இடம் |
| | ஜெ.றொனால்ட் | கணிதம் - 3ம் இடம் |
| 3 | | |
| | ர.சஜீமா | சுற்றாடல் - 1ம் இடம், தமிழ் - 1ம் இடம்,<br>கணிதம் - 3ம் இடம், பொதுத்தேர்ச்சி - 1ம் இடம் |
| | கு.கிருசன் | சுற்றாடல் - 1ம் இடம், தமிழ் - 2ம் இடம்,<br>கணிதம் - 1ம் இடம், பொதுத்தேர்ச்சி - 2ம் இடம் |
| | தே.தரீஸ் | சுற்றாடல் - 2ம் இடம், கணிதம் - 2ம் இடம், பொதுத்தேர்ச்சி - 3ம் இடம் |
| 4 | | |
| | வ.பரணிகா | தமிழ் - 1ம் இடம், கணிதம் - 2ம் இடம்,<br>பொதுத்தேர்ச்சி - 1ம் இடம் |
| | சி.கமுன்சிகா | சுற்றாடல் - 1ம் இடம், கணிதம் - 3ம் இடம், தமிழ் - 3ம் இடம் |
| | சி.தர்மிலன் | சுற்றாடல் - 2ம் இடம், தமிழ் - 2ம் இடம்,<br>பொதுத்தேர்ச்சி - 3 ம் இடம் |
| | அ.அபிஷா | சுற்றாடல் - 3ம் இடம், கணிதம் - 2ம் இடம், பொதுத்தேர்ச்சி - 2ம் இடம் |
| 5 | | |
| | வ.கயூரா | தமிழ் - 1ம் இடம், சுற்றாடல் - 1ம் இடம்,<br>கணிதம் - 1ம் இடம், பொதுத்தேர்ச்சி - 1ம் இடம் |
| | ச.கஜமுகன் | தமிழ் - 2ம் இடம், சுற்றாடல் - 2ம் இடம்,<br>கணிதம் - 2ம் இடம், பொதுத்தேர்ச்சி - 2ம் இடம் |
| | க.வேணுகோபன் | தமிழ் - 3ம் இடம், கணிதம் - 3ம் இடம் |
| | சி.பகீர் | சுற்றாடல் - 3ம் இடம் |
| | தி.சபிநயா | பொதுத்தேர்ச்சி - 3ம் இடம் |

பரமானந்தம் சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்...

# Pragash
## Transport & Agency

**No.475, K.K.S Road,**
**Jaffna.**
**Tel : 021 2958 / 2145**

**No.221, Dam Street,**
**Colombo - 12**
**Tel : 434805 / 543310**






ANDRA
PRINTERS
Awards Shields Medals Trophies
T Shirt Printing ID Card Printing Mug Printing
புத்தகங்கள் | சஞ்சிகைகள்
லேபிள்கள் | விசிற்றிங் காட்
போஸ்ரர்கள் | துண்டுப்பிரசுரங்கள்
356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 221 7279 / 077 6622981
பிரதான அலுவலகம்
379. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
021 222 8929
கிளைகள்
165. மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். 021 221 9929
470/2. கண்டி வீதி (A9). கிளிநொச்சி. 021 720 1275

















Print@andra 021 222 8929